பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 244

செவ்வாய்க்கிழமை
29 ஜூலை 2025

ஆடி 13 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## யாழ்ப்பாணத்தில் மீண்டும் சொகுசுக் கப்பல்

யாழ்ப்பாணம், ஜூலை 29
இந்தியாவில் இருந்து சுற்றுலாப் பயணிகளுடன் கோர்டெலியா குரூஸ் என்ற அதிசொகு 11

# செம்மணிப் புதைகுழி அகழ்வில் சர்வதேசத் தலையீடு அவசியம்!

சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழு வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 29
நீதியை நிலைநாட்டுவதில் உள்ளகப் பொறிமுறைகள் தோல்வியடைந்துள்ளதால், செம்மணிப் புதைகுழி விடயத்தில் நிலையான சர்வதேசக் கண்காணிப்பு அவசியம் - இவ்வாறு சர்வதேச ஜூரர்கள் சபை ஸ்ரீலங்கா அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது. 11



## நல்லூரானுக்கு இன்று கொடி!

யாழ்ப்பாணம், ஜூலை 29
'அலங்காரக் கந்தன்' எனப் போற்றப்படும் வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலய விசுவாவசு வருட மஹோற்சவப் பெருந் 11

## நல்லூர் ஆலயச்சூழலில் போக்குவரத்துக்குத் தடை!

கொழும்பு, ஜூலை 29
வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருந்திருவிழாவை முன்னிட்டு ஆலயச் சுற்று வீதிகளில் நேற்றுத் திங்கட் 11

செம்மணி மனிதப் புதைகுழியில்

## 3 என்புத்தொகுதிகள் நேற்றும் அடையாளம்

யாழ்ப்பாணம், ஜூலை 29
அரியாலை செம்மணி மனிதப் புதைகுழியின் நேற்றைய அகழ்வின்போது புதிதாக மூன்று மனித என்புத் தொகுதிகள் அடையாளம் 11

செம்மணி மனிதப்புதைகுழி

## அதிநவீன ஸ்கானருக்கு அரசாங்கம் முட்டுக்கட்டை

யாழ்ப்பாணம், ஜூலை 29
செம்மணி மனிதப் புதைகுழியில், ஜி.பி.ஆர். ஸ்கானர் (தரையை ஊடுருவும் ராடர்) மூலம், பரந்துபட்ட ஸ்கான் நடவடிக்கைகளை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டிருந்த நிலையில், அந்தக் கருவியின் பயன்பாட் 11

முன்னாள் கடற்படைத்தளபதி

## நிஷாந்த உலுகேதென்ன சி.ஐ.டி.யால் கைது!



கொழும்பு, ஜூலை 29
முன்னாள் கடற்படைத் தளபதி நிஷாந்த உலுகேதென்ன குற்றப் புலனாய்வுத் துறையினரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.
கடற்படையில் புலனாய்வுத்துறை இயக்குநராக 11

இன்று நள்ளிரவு முதல்

## ரயில் சாரதிகள் பணிப்புறக்கணிப்பு



யாழ்ப்பாணம், ஜூலை 29
தொழில்சார் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுமாறு வலியுறுத்தி ரயில் சாரதிகள் இன்று நள்ளிரவுமுதல் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடுவதற்குத் தீர்மானித்துள்ளனர்.
ஒழுங்கற்ற சமிக்ஞைக் கட்டமைப்புகள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளுக்குத் 11

'நல்லூர் தொடங்கி தைப்பொங்கல் வரைக்கும் இனி யாழ்ப்பாணத்தார் தாவரவுண்ணியள் தான் கண்டியளோ'

## தவறி வீழ்ந்து இளைஞர் பலி

பண்டத்தரிப்பில் சோகம்

யாழ்ப்பாணம், ஜூலை 29
உறவினர்களுடன் சேர்ந்து ஆட்டம், பாட்டம் என கொண்டாட்டத்தில் ஈடுபட்டிருந்த இளைஞர் ஒருவர் தவறி வீழ்ந்து நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார். 11

யாழ். பல்கலையின் கிளிநொச்சி வளாக

## பாதுகாப்பு உத்தியோகத்தர் நேற்று சடலமாக மீட்பு!

கிளிநொச்சி, ஜூலை 29
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி வளாக விவசாய பீடப் பகுதியில் கடமையில் ஈடுபட்டிருந்த தனியார் நிறுவனம் ஒன்றைச் சேர்ந்த பாதுகாப்பு உத்தியோகத்தர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அவர் மாடி 11



கொமர்ஷல் வங்கி சிலோன் பீஎல்சி யின் சக்தியுடன்
உங்களின் வெற்றிக்காக
உங்கள் பின்னணியில்
CBC FINANCE



வாகன லீசிங்
வாகன கடன்
தங்கக் கடன்
சேமிப்பு மற்றும் நிலையான வைப்புகள்
உங்களுக்கும் உங்கள் சிறிய மற்றும் நடுத்தர வணிகங்களுக்கும் லீசிங், கடன் உள்ளிட்ட பல்வேறுபட்ட நிதியியல் சேவைகளுடன் கை கொடுக்கும்,
CBC பினேன்ஸ் - உங்கள் வெற்றியின் பின்னணியில்
0768 700 700
FitchRating
www.cbcfinance.lk
CBC FINANCE
A Fully Owned Subsidiary of Commercial Bank of Ceylon PLC



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | ஹந்தஹண ராசி சுப பலன் | NLB ஜய | மெகா பவர் | மஹஜன சம்பத | தன நிதானய | அத சம்பத | சுப தவசக் |
|---|---|---|---|---|---|---|---|
| திகதி 28.07.2025 | திகதி 28.07.2025 | திகதி 28.07.2025 | திகதி 28.07.2025 | திகதி 28.07.2025 | திகதி 28.07.2025 | திகதி 28.07.2025 | திகதி 28.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் 4146 | சீட்டிழுப்பு இலக்கம் 1213 | சீட்டிழுப்பு இலக்கம் 0172 | சீட்டிழுப்பு இலக்கம் 2252 | சீட்டிழுப்பு இலக்கம் 5904 | சீட்டிழுப்பு இலக்கம் 1934 | சீட்டிழுப்பு இலக்கம் 0479 | சீட்டிழுப்பு இலக்கம் 0020 |
| ஆங்கில எழுத்து E | வெற்றி இலக்கினம் ரிஷபம் | ஆங்கில எழுத்து P | ஆங்கில எழுத்து J | ஆங்கில எழுத்து R | ஆங்கில எழுத்து P | ஆங்கில எழுத்து R | வெற்றி இலக்கினம் தனுசு |
| | | | சுப்பர் இலக்கம் 26 | | | | |
| வெற்றி இலக்கங்கள் 08 53 58 75 | வெற்றி இலக்கங்கள் 02 11 26 59 | வெற்றி இலக்கங்கள் 3 8 3 1 | வெற்றி இலக்கங்கள் 48 60 68 76 | வெற்றி இலக்கங்கள் 5 8 5 3 5 3 | வெற்றி இலக்கங்கள் 49 77 79 80 | வெற்றி இலக்கங்கள் 5 3 5 3 | வெற்றி இலக்கங்கள் 04 13 37 42 |
| விசேட எழுத்து E | | | | | விசேட எழுத்து P | | |



# எரிபொருள் நுகர்வு இலங்கையில் வீழ்ச்சி

மட்டக்களப்பு, ஜூலை 29

**நாட்டில் எரிபொருள் நுகர்வு சுமார் 30 சதவீதம் வீழ்ச்சியடைந்துள்ளது என்று வலுசக்தி அமைச்சர் குமார ஜயகொடி தெரிவித்துள்ளார்.**

மட்டக்களப்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

புதிய எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கான அனுமதிப்பத்திரங்கள் வழங்கும் நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. மின்சார உற்பத்திக்குப் புதுப்பிக்கத்தக்க ஆற்றலை அதிகமாகப் பயன்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன - என்றார். (எ-இ)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 28.07.2025 |
| தினம் | திங்கட்கிழமை |
| வெற்றி வாரம் | 0612 |
| ஆங்கில எழுத்து | N |
| வெற்றி இலக்கம் | 0 5 4 8 4 1 |

| Super Ball | |
|---|---|
| திகதி | 28.07.2025 |
| தினம் | திங்கட்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 2878 |
| ஆங்கில எழுத்து | A |
| வெற்றி இலக்கம் | 06 31 36 48 |

| சனிதா | |
|---|---|
| திகதி | 28.07.2025 |
| தினம் | திங்கட்கிழமை |
| ஆங்கில எழுத்து | V |
| வெற்றி இலக்கம் | 02 08 52 60 |
| வெற்றி வாரம் | 5039 |

| லக்ன ராசி | |
|---|---|
| திகதி | 28.07.2025 |
| தினம் | திங்கட்கிழமை |
| தனுசு | ♐ |
| வெற்றி இலக்கம் | 14 20 31 38 |
| சீட்டிழுப்பு வாரம் | 4590 |

| KAPRUKA | |
|---|---|
| திகதி | 28.07.2025 |
| தினம் | திங்கட்கிழமை |
| ஆங்கில எழுத்து | T |
| சுப்பர் இலக்கம் | 06 |
| வெற்றி இலக்கம் | 04 43 53 57 |
| வெற்றி வாரம் | 2054 |

| அத கோடிபதி | |
|---|---|
| திகதி | 28.07.2025 |
| தினம் | திங்கட்கிழமை |
| ஆங்கில எழுத்து | C |
| வெற்றி இலக்கம் | 18 20 47 75 |
| வெற்றி வாரம் | 2704 |

| JAYODA | |
|---|---|
| திகதி | 28.07.2025 |
| தினம் | திங்கட்கிழமை |
| ஆங்கில எழுத்து | O |
| வெற்றி இலக்கம் | 08 12 22 45 |
| வெற்றி வாரம் | 2147 |

## மாலைதீவுக்கு பயணமானார் ஜனாதிபதி

கொழும்பு, ஜூலை 29

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான உயர்மட்டத் தூதுக்குழு 3 நாள்கள் உத்தியோகபூர்வ பயணமாக நேற்று திங்கட்கிழமை மாலைதீவு பயணமானது. மாலைதீவு ஜனாதிபதி மொஹமட் முய்ஸுவின் அழைப்புக்கமைய இந்தப் பயணம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பயணத்தின்போது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, மாலைதீவு ஜனாதிபதி முய்ஸுவுடன் இருதரப்புப் பேச்சுகளை நடத்தவுள்ளார் என்றும் பரஸ்பர ஒத்துழைப்பை ஆழப்படுத்தும் நோக்கில் பல புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பரிமாறிக்கொள்ளப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## ‘GovPay’ இல் அபராதம் நேற்றுமுதல் நடைமுறை

கொழும்பு, ஜூலை 29

போக்குவரத்து விதி மீறல்களுக்கான அபராதங்களை ‘GovPay’ செயலி மூலம் செலுத்தும் வசதி மேல் மாகாணத்தில் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

பொலிஸாரால் விதிக்கப்படும் உடனடி போக்குவரத்து அபராதங்களை இனி இந்தச் செயலிமூலம் செலுத்த முடியும்.

இலங்கை தகவல் மற்றும் தொடர்புத் தொழில்நுட்ப நிறுவனம் இந்தக் கட்டணமுறைக்கு ஜூலை மாதம் அமைச்சரவை ஒப்புதலைப் பெற்றதைத் தொடர்ந்து இந்த நடைமுறை மேல் மாகாணத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. (ச-இ)

## பிரபல வர்த்தகர் திலினி கைது

கொழும்பு, ஜூலை 29

பிரபல வர்த்தகரான திலினி பிரியமாலி நேற்றுத் திங்கட்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார் என ஹோமாகம தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஹோமாகம நீதிமன்றில் கடமையாற்றும் அதிகாரி ஒருவரைக் கடமைகளைச் செய்யவிடாது இடையூறு விளைவித்தமை உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகள் தொடர்பில் ஹோமாகமப் பொலிஸ் நிலையத்தில் முன்னிலையாகியபோது பொலிஸாரால் அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். (ச-இ)



## இனியபாரதி வீட்டில் சி.ஐ.டி. சோதனை!

கொழும்பு, ஜூலை 29

கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் என்ற பிள்ளையானின் நெருங்கிய நண்பரான மாகாணசபை முன்னாள் உறுப்பினர் இனியபாரதியின் வீட்டில் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் சோதனை மேற்கொண்டனர்.

இதன்போது இனிய பாரதியின் சகாவான தொப்பி மனாப் என்றழைக்கப்படும் முன்னாள் திருக்கோவில் பிரதேசசபை உறுப்பினரான சி. விக்கினேஸ்வரன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கடத்தல்கள், கொலைகள் மற்றும் கொள்ளைகள் உள்ளிட்ட குற்றங்களில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இனியபாரதி அண்மையில் குற்றப்புலனாய்வு அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார். (ச-இ)

## யோஷிதவுக்கு எதிரான வழக்கு செப்ரெம்பரில்

கொழும்பு, ஜூலை 29



சுமார் 73 மில்லியன் ரூபா பெறுமதியான சொத்துகளை சட்டவிரோதமாகக் கையாண்டனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் மகன் யோஷித ராஜபக்ச மற்றும் அவரது பாட்டியான டெய்சி பாரெஸ்ட் ஆகியோருக்கு எதிராகச் சட்டமா அதிபரால் தாக்கல் செய்த வழக்கை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 22ஆம் திகதி விசாரணைக்கு எடுக்க கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த வழக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சஹன் மாபா பண்டார முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

யோஷித ராஜபக்ச சார்பாக முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி சம்பத் மெண்டிஸ், நீதிமன்றத்தில் சமர்ப்பணங்களை முன்வைத்தார்.

இந்த வழக்கில் தடயவியல் கணக்காய்வு அறிக்கையை ஆதாரமாக முன்வைத்ததோடு, கணக்காய்வு அறிக்கையைத் தயாரிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட மின்னஞ்சல் செய்திகள் அடங்கிய 26 இறுவட்டுகள், 8 யுஎஸ்பி, வன்தட்டு (Hard Disk), ஒரு மடிக்கணினி மற்றும் ஒரு கணினி ஆகியவற்றை அணுகி ஆய்வு செய்ய அவர் அனுமதி கோரினார்.

இந்தக் கோரிக்கைக்குத் தாம் ஆட்சேபனைகளைத் தெரிவிக்க போவதில்லை என்று அரச தரப்பு சட்டத்தரணி குறிப்பிட்டார். அதையடுத்து இந்த வழக்கை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 22 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளத்தீர்மானிக்கப்பட்டது. (எ-இ)

## விசேட சோதனை; ஒருநாளில் 1,182 பேர் கைது

கொழும்பு, ஜூலை 29

நாடளாவியரீதியில் கடந்த 26ஆம் திகதி சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனையின்போது ஆயிரத்து 182 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டில் இடம்பெறும் போதைப்பொருள் வர்த்தகம் மற்றும் திட்டமிட்ட குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரியவின் பணிப்புரைக்கு அமைய இந்த விசேடசுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சாமிர்தம் போல் நெஞ்சில் பண்புடன் இனிப்பவன்

## நல்லைக்கந்தனுக்கு இன்று கொடியேற்றம்

கே.எஸ்.சிவஞானராஜா

அகிலமதில் அக்கிரமங்களையும் அராஜகங்களையும் அநியாயங்களையும் தட்டிக்கேட்டுத் தடுத்து நிறுத்தித் தண்டிக்கின்ற தலையாய தெய்வமாக திகழ்பவர் முருகப்பெருமானாவார். இதன்பொருட்டு நல்லூர், கதிர்காமம், சந்நிதி, கந்தவனக்கடவை, மாவிட்டபுரம் ஆகிய திருத்தலங்களில் ஆவலோடு, காவலாய், கோலவடிவினராய், ஞானவிருட்சமாய் முருகப்பெருமான் திருவருள் பாலிக்கின்றார்.

இன, மத, மொழி, நிற, குல பேதங்கடந்து வரந்தர முருகப்பெருமான் அருளாட்சிபுரிகின்றார். நல்லூரானது உலகம் போற்றும் உன்னத பதியாகும். தவத்திரு யோகர் சுவாமிகள் தாம் பாடியருளிய நற்சிந்தனை மூலம், "நல்லூரைக் கும்பிட்டு நீ பாடு அதனாலே நாட்டிலுள்ள பிணிகள் ஓடும்" என்று சைவசமயிகளுக்கு எப்பவே முடிந்த காரியமாகத் திருவாய் மலர்ந்துள்ளார். 1944.10.17 மலர் பத்து, இதழ் பதினொன்று வாயிலாக மேற்படி பாடலைச் சுவாமிகளே பாடி மெய்சிலிர்த்துள்ளார். கந்தபுராணக் கலாசாரத்தைக் கைவிடாத இலங்கையின் வடபுல மாந்தர்களை நோக்கி, நல்லூர் முருகனே உங்களுக்கான மருந்து என்று, தூரநோக்கோடு ஓர் உண்மையினைப் பேறாக்கியுள்ளார். அப்பாடலானது இன்றும் நல்லூர்த் தேரடியிலும், சுவாமிகளின் கொழும்புத்துறைப் பதியிலும், நல்லூர்த் தேரடிச்சித்தர் செல்லப்பா சுவாமிகள் நினைவாலயத்திலும் நீண்டு ஒலிக்கிறது. ஆமாம்! மூர்த்தி, தலம், தீத்தம், அற்புதம் அதிசயம், ஆச்சரியம், ஆனந்தம், சமத்துவம், சாந்தம், சகோதரத்துவம் நிறைந்த ஆலயம் நல்லூராகும். எந்நாளும் நல்லூரை வலம்வந்து வணங்கினால் இடர்கள் எல்லாம் போகும் என்பது ஓர் அதிசயமேயாகும்.

நல்லூர் என்றதும் முதல் ஞாபகத்திற்கு வருவது நேரமுகாமையேயாகும். சொன்னபடி நேரம் சொட்டும் அரக்காத பூஜை, அந்தணர்களின் ஆசார சீலப்பிரசன்னம், எஜமானின் பாரம்பரிய ஒழுக்க ஒழுங்குகள், பேச்சு மூச்சுக்கதை எதுவுமில்லாத பரிபக்குவம், அமைதியான தொண்டர்கள், பரபரப்பில்லாத நிர்வாகக் கட்டமைப்பு, சொந்தபந்த இன சன குடும்ப ஆதிக்கமின்மை, அக்கம் பக்கம் பார்த்து எல்லை மீறாமை, தேவையற்ற வர்ணனைகளால் அடியவர்களின் காதுகளையும், பக்தியையும் துன்புறுத்தாமை, கந்தபுராணக் கலாசார விழுமியங்களைக் கொச்சைப்படுத்தாமை, நாகரிக உடை நடை பாவனைக்கு இடமளிக்காமை, ஆண்கள் மேலங்கியோடு போர்த்துக்கொண்டும் உள்நுழைய அனுமதிக்காமை, பதவிநிலை கௌரவ மேதாவிகளையும் ஓர் அடியவர்போல் எண்ணி உபசாரம் செய்யாமை ஆகிய சிறப்புக் கைங்கரியப் பண்புகளினால் நல்லூர் ஏனைய நிர்வாகங்களிலிருந்து தனித்துவமாகின்றது.



ஒரு ரூபாவோடு எந்தப் பாமரரும் நல்லூர் முருகனோடு பேசலாம், கதைக்கலாம், பாடலாம், திருவிளையாடல் புரியலாம், வலம் வரலாம், நமஸ்காரம் செய்யலாம்.

2011இல் 108 அடி உயரமான தெற்கு வாசல் பிரம்மாண்டமான கோபுரமும், 2015இல் 108அடி உயரமான வடக்கு வாசல் குபேர வாசல் பிரம்மாதமான கவின்தரு கோபுரமும் பேறாகியிருப்பது நல்லூரின் அதிசயங்களாகும்.


கி.பி870, கி.பி948, கி.பி1248 ஆகிய மூன்று காலங்கள் நல்லூரின் தோற்றம் பற்றி நூல்கள் குறிப்பிடுகின்றமையானது ஆய்வுக்குரியதாகும். 1882ஆம் ஆண்டு சைவக் கோவில் பதிவேட்டின் பிரகாரம், நல்லூர்க் கோவில் குருக்கள் வளவு என்ற காணியில் ஆரியச்சக்கரவர்த்தியின் பிரதம மந்திரி புவனேகபாகுவால் கி.பி 884இல் கட்டப்பட்டது என்ற குறிப்பும், கல்வெட்டுகளின் பிரகாரம், கி.பி.948இல் நல்லூர் கட்டப்பட்டது என்ற கலாநிதி.கா.இந்திரபாலாவினது குறிப்பும், மேலும் நல்லூரானாது 3தடவை அழிக்கப்பட்டு கி.பி.1734இல் கந்தமடாலயமாகவும், கி.பி.1739இல் பிரம்மாண்டமான கோவிலாகவும் கட்டப்பெற்று, கி.பி.1902இல் கும்பாபிஷேகம் நடைபெற்றது. இன்று யாழ்ப்பாணத்தின், ஆன்மீக இராஜாங்கமாக நல்லூர் விளங்குகின்றது. கிழக்கே வெயிலுகந்தப் பிள்ளையார் ஆலயமும், மேற்கே வீரமா காளியம்மன் ஆலயமும், வடதிசையில் சட்டநாதர் ஆலயமும், தென்திசையில் கைலாசப் பிள்ளையார் ஆலயமும் நல்லூரை மென்மேலும் அதிசயமாக்குகின்றன. அதுமட்டுமல்ல காவலும் செய்கின்ற புராதன ஆலயங்களுமாகும். அலங்காரக் கந்தனாக மிளிரும் நல்லூர் மஹோற்சவங்களில் மஞ்சத்திருவிழா, கைலாய வாகன உற்சவம், மாம்பழத்திருவிழா, சப்பைரத(சப்பரத்)திருவிழா, தேர்த்திருவிழா, தீர்த்தத்திருவிழா, பூங்காவனத்திருவிழா ஆகிய உற்சவங்கள் மெய்சிலிர்க்க வைப்பனவாகும்.

நல்லூர் மஹோற்சவமானது, எமது நாட்டிலே அனைவரும் சமமானவர்கள் என்ற தத்துவத்தை எடுத்தியம்புகின்றது. பஞ்சமாபாதகங்கள் அறவே ஒழிக்கப்பட வேண்டிய அவசியத்தை உணர்த்துகிறது. அவரவர் கடமையை நல்லூரைப்போல பொறுப்பாக்கவேண்டுமென எதிர்பார்க்கிறது. சிறுவர்களின் பாதுகாப்புக்காக இரங்குகிறது.

# அராலி சரஸ்வதி இந்துவில் விளையாட்டு அரங்கு திறப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 29

யாழ். அராலி சரஸ்வதி இந்துக் கல்லூரியின் சண்முகலிங்கம் அன்னலட்சுமி ஞாபகார்த்த விளையாட்டு அரங்கு திறப்புவிழா கடந்த வெள்ளிக்கிழமை சிறப்பாக நடைபெற்றது. கல்லூரியின் முதல்வர் கு.பாலகுமரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக ஓய்வுநிலைக் கணக்காய்வு அத்தியட்சகர் செ.சிவகுரு, சிறப்பு விருந்தினராக சட்டத்தரணி நா.பார்த்தீபன் உள்ளிட்டோருடன் ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர் மற்றும் நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ச-25, 27)










## நல்லூரான் சிறப்பம்சம்

### இனவிடிவுக்காக கொடியேறி வருவாயே!

நல்லைப் பதியுறை நாதனே!
தில்லைக் கூத்தன் மைந்தனே! உன்
எல்லையின் கொடூரப் படுகொலைக்கு
நீதிபெறக் கொடியேறி வருவாயே!

தேவர்சிறைமீட்ட தெய்வமே!தமிழர்
சிறைமீட்கக் கொடியேறி வருவாயே!
மதவாதம் இனவாதம் ஒழிந்திடவே!
மால்மருகனே!கொடியேறி வருவாயே!

கொடிய மதமாற்றம் ஒழிந்திடவே!
கொடியேறி வந்தருள்வாய் குகனே!
விடுதலை தேடும் தமிழ் இனத்திற்கு
விடிவுதரக் கொடியேறி வருவாயே!

கவிஞர் சரசாலையூரான்

### மயிலேறும் கந்தா...

நாதமும் மேளமும்
தாளத்தோடினையும்
நல்லூரான் புகழ்பாட
நாவினிலே இனிக்கும்
சீதமதிக்குடைக்கீழ் அகம்
சிந்தையிலே சிங்காரம் காணும்
வந்தமர்வன்
சிவனாரின் மைந்தன்
மாதிருவர் சூழும் மன்னனிவனாக
மயூரன் மனம் கனிந்தருள்
மயிலேறி வருவான் ஆதாரம் இவனென்றே
அடியார் பதம் பற்ற
அழகுக் கொடியேறும்மா
அருட்காட்சி காண !

தேவி.கனேஸ் ஆனைப்பந்தி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நல்லூர்ப் பெருந்திருவிழா கொடிச்சீலை கையளிப்பு



படங்கள் ஐ. சிவசாந்தன்



**யாழ்ப்பாணம், ஜுலை 29**

**வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவப் பெருவிழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ள நிலையில் கொடியேற்றத்துக்கான கொடிச்சீலை எடுத்துவரும் நிகழ்வு நேற்று பக்திபூர்வமாக நடைபெற்றது.**

செங்குந்தர் பரம்பரையினரால் நல்லூர் ஆலயக் கொடியேற்றத்துக்கான கொடிச்சீலை ஆலயத்தில் ஒப்படைக்கப்படுவது பாரம்பரிய வழக்கமாகும். அதன்படி கல்வியங்காட்டில் அமைந்துள்ள கொடிச்சீலை வழங்கும் செங்குந்தர் பரம்பரையைச் சேர்ந்தவரின் இல்லத்தில் கொடிச்சீலைக்கு விசேட பூஜைகள் இடம்பெற்று மங்கள வாத்தியம் சகிதம் கல்வியங்காடு வேல்மடம் முருகன் ஆலயத்துக்குக் கொடிச்சீலை எடுத்துவரப்பட்டது. அங்கு விசேட பூஜைகள் இடம்பெற்று அங்கிருந்து கொடிச்சீலை சிறிய இரதத்தில் பருத்தித்துறை வீதி ஊடாக நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்துக்கு எடுத்து வரப்பட்டு நல்லூர் ஆலய பிரதம குருக்களிடம் கையளிக்கப்பட்டது. இன்று காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் மஹோற்சவ பெருவிழா தொடர்ந்து 25 நாள்கள் இடம்பெறவுள்ளது. (ச-27,66)



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். சகோதரர்கள் உங்களிடம் ஆலோசனை கேட்டு வருவார்கள். சிலருக்கு அவ்வப்போது மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். மாலையில் உற்சாகமாகக் காணப்படுவீர்கள். சிலருக்குப் புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும்.

**இடபம்:** புதிய முயற்சிகள் எதுவும் வேண்டாம். ஒரு சிலருக்கு வெளியூர்களில் இருக்கும் கோயில்களைத் தரிசிக்கும் வாய்ப்பு ஏற்படக்கூடும். மாலையில் குடும்பத்துடன் உறவினர், நண்பர்கள் வீட்டுக்குச் சென்று வருவீர்கள். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிக்கு ஒத்துழைப்புத் தருவார்.

**மிதுனம்:** தெய்வ அனுகூலம் நிறைந்த நாளாக இருக்கும். மனதுக்கு மகிழ்ச்சிதரும் சம்பவம் நடைபெறும். உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகமான சூழ்நிலை காணப்படும். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும், சுபச்செலவாக இருக்கும் என்பது ஆறுதல் தரும்.

**கடகம்:** தேவையான பணம் கையில் இருப்பதால் உற்சாகமாக இருப்பீர்கள். சிலருக்கு தாய்வழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். வாழ்க்கைத்துணைவழியில் மகிழ்ச்சியான செய்தி கிடைக்கும்.

**சிம்மம்:** புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு நவீன டிசைனில் ஆடை வாங்கும் வாய்ப்பு ஏற்படும். உங்கள் தேவையறிந்து நண்பர் செய்யும் உதவி மகிழ்ச்சிதரும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கன்னி:** குடும்பம் அல்லது வேலை தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதை இன்றைக்குத் தவிர்ப்பது நல்லது. எதிர்பாராத செலவுகள் ஏற்பட வாய்ப்பு இருப்பதால் சிலர் கடன் வாங்கவும் நேரிடும். வெளியில் செல்லும்போது கைப்பொருள்களை பத்திரமாக வைத்துக்கொள்ளவும்.

**துலாம்:** இன்றைக்கு எதிலும் நிதானமாகச் செயற்படவும். பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. சிலருக்குத் தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். குடும்பத்தில் வீண்விவாதம் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**விருச்சிகம்:** தொடங்கும் காரியங்கள் வெற்றி பெறும் நாள். தேவையான பணம் கிடைக்கும். தாய்வழி உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகம் உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும்.

**தனுசு:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. தந்தையின் தேவையைப் பூர்த்திசெய்து மகிழ்வீர்கள். குடும்பத்தினருடன் வெளியிடங்களுக்குச் சென்றுவரும் வாய்ப்பு ஏற்படும். மாலையில் பள்ளி, கல்லூரிக்கால நண்பர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள்.

**மகரம்:** பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்ற முயற்சி செய்யவும். உறவினர்கள் வருகையால் திடீர்ச்செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்துவிடுவீர்கள். சிலருக்குக் குடும்பத்துடன் கோயிலுக்குச் செல்லும் வாய்ப்பு ஏற்படும்.

**கும்பம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். எதிர்பார்த்த பணம் கைக்குவரும். தாயிடம் கேட்ட உதவி கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத செலவுகளுடன் தேவையற்ற அலைச்சலும் ஏற்படக்கூடும். சிலருக்குத் திடீர்ப்பயணங்களும் அதனால் ஆதாயமும் உண்டாகும்.

**மீனம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். புதிய முடிவுகளைத் துணிந்து எடுப்பீர்கள். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தினர் உங்கள் யோசனைக்கு முக்கியத்துவம் தருவார்கள். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜுலை 29

யாழ்ப்பாணம் நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி கோவில் நடத்தும் வாராந்தச் சுக்கிர வாரக் கந்தபுராண படனத்தொடரின் 32 ஆவது சொற்பொழிவு ஆலயத்தின் சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சிவநெறிப் பிரகாசர், சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறும் நிகழ்வில், ஆலயத்தின் பிரதம குருக்கள் ஸ்கந்தகுரு ஞானபானு, சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக் குருக்களின் ஆசியுரையும், பரிபாலனசபைத் தலைவர் சி. தயாநாதனின் தலைமையுரையும், சைவப்புலவர், பிரசங்க பூஷணம்செ.த.குமரனின் "அசுரர் யாகப் படலம்" எனும் விடயப்பொருளில் சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறவுள்ளன.

சொற்பொழிவிலிருந்து நீர்வைக்கந்தன் புராண இதிகாசப் பாடசாலை மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-4)

வெளிநாடுகளில் இலங்கைக்கு எதிராக

# போராட்டம் நடத்துவோரை நாட்டுக்குள் வரவிடக்கூடாது!

## விமல் வீரவன்ஸ ஆவேசம்

கொழும்பு, ஜுலை 29

'இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக வெளிநாடுகளில் போராட்டம் செய்வோரை மீண்டும் நாட்டுக்குள் நுழைய இடமளிக்கக்கூடாது' என்று கருத்துவெளியிட்டுள்ளார் முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ.



கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபின்னர் வெளிநாடுகளில் இருக்கும் முன்னாள் விடுதலைப்புலிகள் தம்மை புலம்பெயர் மக்கள் என்று கூறி, இலங்கைக்கு எதிராக போராட்டங்களை நடத்துகின்றனர். இந்தப் போராட்டங்களை தேசிய மக்கள் அரசாங்கம்தான் நடத்தச் சொல்கிறதோ என்ற சந்தேகம் எமக்குண்டு. ஏனெனில் புலம்பெயரிகளின் ஆதரவுடனேயே இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்துள்ளது. எனவே இவ்வாறான போராட்டங்களைக் காரணம் காட்டி, வடக்கு-கிழக்கை பிரித்துக் கொடுக்க இந்த அரசாங்கம் திட்டமிட்டிருக்கலாம்.

ஆயினும் நாட்டுக்கு அவப்பெயரை உண்டாக்கும் வகையில் வெளிநாடுகளில் போராட்டம் நடத்தும் தமிழர்களை மீண்டும் இந்த நாட்டுக்குள் அனுமதிக்கக்கூடாது. அப்படி நடவடிக்கை எடுக்கும் துணிச்சல் இந்த அரசுக்கு உண்டா என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (ம-44)




புலம்... 2?ஆம் திகதி பிரிட்டனின் நடந்த ஆர்ப்பாட்டத்தின்போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுப்பிக்கத்தக்க ஆற்றலால் 70 சதவீத மின்சார உற்பத்தி!

## இலக்கு நிர்ணயித்தது அரசாங்கம்



**கொழும்பு, ஜூலை 29**
**இலங்கையின் 70 வீத மின்சாரத்தை 2030 ஆம் ஆண்டுக்குள் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலங்களில் இருந்து பெறுவதற்கு அரசாங்கம் இலக்கு நிர்ணயித்துள்ளது என்று வலுசக்தி அமைச்சர் குமார ஜயகொடி தெரிவித்துள்ளார்.**

மின்சார உற்பத்திக்கு புதுப்பிக்கத்தக்க ஆற்றலை அதிகளவில் பயன்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. இதற்காக சூரிய, காற்று, நீர் மற்றும் உயிரி ஆற்றல் வளங்களைப் பயன்படுத்துவதற்கு முன்னுரிமை அளிக்கப்படுகின்றது என்று வலுசக்தி அமைச்சர் குமார ஜயகொடி தெரிவித்துள்ளார். (ச-இ)

## அமெரிக்க தீர்வைவரி இந்த வாரமும் பேச்சு!

கொழும்பு, ஜூலை 29
இலங்கையின் ஏற்றுமதி பொருள்களுக்கு அமெரிக்காவால் விதிக்கப்பட்டுள்ள பரஸ்பர தீர்வைவரியைக் குறைப்பது தொடர்பான மற்றொரு கலந்துரையாடல் இந்த வாரம் இடம்பெறவுள்ளது. நிதியமைச்சின் அதிகாரிகள் மற்றும் அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதிகளிடையே இந்தக் கலந்துரையாடல் நிகழ்நிலை ஊடாக இடம்பெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் முதலாம் திகதிக்கு முன்னர் கலந்துரையாடல்களில் முன்னேற்றம் ஏற்படும் என இலங்கைப் பிரதிநிதிகள் குழு நம்பிக்கை வெளியிட்டுள்ளது. (ச-இ)



## தறிகெட்டு ஓடிய வாகனம் ஒருவர் பலி; 5 பேர் காயம்!

கொழும்பு, ஜூலை 29
பொரளையில் கல்லறைச் சுற்றுவட்டத்துக்கு அருகில் நேற்று திங்கட்கிழமை காலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். ஐந்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். தடுப்புச் (பிரேக்) செயலிழந்ததால் கட்டுப்பாட்டை இழந்த பாரம்தூக்கி வாகனம் ஒன்று பல வாகனங்களை மோதியதுடன் மோட்டார் சைக்கிள்கள்மீதும் ஏறிச்சென்றுள்ளது. இந்தச் சம்பவத்தில் 62 வயதுடைய ஒருவர் உயிரிழந்த நிலையில், ஐவர் காயமடைந்துள்ளனர்.
காயமடைந்தவர்கள் கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளநிலையில், இந்தச் சம்பவம்தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-இ)



## பொலிஸ் அதிகாரிகள் மூவர் இடைநீக்கம்!

கொழும்பு, ஜூலை 29
மருதானைப் பொலிஸ் நிலையத்தில் பணியாற்றிய பொலிஸ் அதிகாரிகள் மூவர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.
போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு உதவிய குற்றச்சாட்டில் அவர்கள் அண்மையில் கைதுசெய்யப்பட்டிருந்த நிலையில் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். (ச-இ)

### கல்வி சீர்திருத்தங்களின்கீழ்

## பாடசாலை நேரத்தில் இரு இடைவேளைகள்

கொழும்பு, ஜூலை 29
புதியகல்விச்சீர்திருத்தங்களின் கீழ், பாடசாலை நேரங்கள் மற்றும் இடைவேளை நேரங்கள் மாற்றப்பட்டுள்ளன.
பாடசாலைகள் காலை 7.30 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை நடைபெறும். அத்துடன் இரண்டு இடைவேளைகளை வழங்கப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.
அடுத்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதியிலிருந்து பாடசாலை நேரம் ஒரு நாளைக்கு 50 நிமிடங்கள் அதிகரிக்கும் என்பதால், மாணவர்களால் அதைத் தாங்கமுடியாது. அதனால் தினமும் காலை 10.10 மணி முதல் காலை 10.30 மணி வரை மற்றும் மதியம் 12.10 மணி முதல் மதியம் 12.20 மணி வரை இரண்டு இடைவேளை வழங்கப்பட்டுள்ளன என்று தேசிய கல்வி நிறுவனத்தின் உதவிப் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.
அத்துடன், வகுப்புநேர அட்டவணைகளும் மாற்றப்பட்டுள்ளன. காலை 7.40 முதல் 8.30 மணி வரை, காலை 8.30 -9.20 மணி வரை, காலை 9.20 முதல் 10.10 மணி வரை, காலை 10.30 முதல் 11.20 மணி வரை, காலை 11.20 முதல் மதியம் 12.10 மணி வரை மற்றும் மதியம் 12.20 முதல்1.10 மணி வரை, பிற்பகல் 1.10 முதல் 2 மணி வரை என வகுப்புநேர அட்டவணைகள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச-இ)




## சறுக்கினது சாட்டு!

அஞ்சு ரூபாவுக்குக் குதிரையும் வேணும், ஆறுகடக்கப் பாயவும் வேணும். இதுதான் இஞ்சத்தை அதிகாரிமாரின்ர எண்ணம், சிந்தனை எல்லாமே. ஏனெண்டால் அப்பத்தானே அஞ்சுரூபாக் குதிரைக்கு ஆயிரம் ரூபா கணக்குக் காட்டி மிச்சம் தொள்ளாயிரத்து தொண்ணூற்று அஞ்சு ரூபாவையும் தாங்கள் மடக்கலாம். அதிலையும் உந்த றோட்டுகளுக்குப் பொறுப்பான டிப்பார்ட்மெண்ட்காரரைப் பற்றிச் சொல்லவேண்டியதில்லை. அவையள் ஒரு றோட்டுப் போடேக்க வெட்டியெடுக்கிற காசில நாலைஞ்சு வீடுகள் கட்டலாம் எண்டு சனங்கள் கதைக்கிறதும் உண்மைதான் போல. எதுக்கு இப்படிப் பிலாக்கனம் எண்டு யோசிப்பியள். எல்லாம் காரணகாரியத்தோடதான்.

வல்லைப்பாலம் சறுக்கிறது கூடவெண்டும், அதால கனபேர் அக்சிடெண்ட் ஆகி செத்தவையெண்டும் எல்லாருக்கும் தெரியும். போன வருசம் ஒராள் அநியாயமா அதில செத்தபிறகு அந்தப் பாலத்தின்ர ரண்டு பக்கமும் 'ஸ்பீட் பிரேக்கர்' மாதிரி மேடுமாதிரிக் கட்டினவை. அந்த மேட்டில ஏறி இறங்கவேணும் எண்டா வாகனங்களின்ர வேகத்தைக் கட்டாயம் குறைக்கத்தான் வேணும். கண்ணைமூடிக்கொண்டு கடும் வேகத்தில மோட்டுத்தனமா வந்தால் அந்த மேட்டில ஒருக்கா வாகனம் மேல போய் பொத்தெண்டு கீழ விழும். அதால எல்லாரும் மெதுவாத்தான் இப்ப போறவை. ஆனாலும் மெதுவா வந்தாலென்ன, வேகமா வந்தாலென்ன உங்களை வழுக்கி விழுத்தியே தீருவன் எண்டு வல்லைப்பாலம் சபதம் செய்திருக்குப்போல. பனிக்காலத்திலையும், மழைகாலத்திலையும் இடைக்கிடை வாகனங்களை அது வழுக்கி விழுத்தத்தான் செய்யுது. இப்ப மெதுவாப் போறதால வாகனங்களுக்குச் சேதாரம் குறைவேதவிர, வழுக்கிறதன்மை மட்டும்குறையேலை. இதைப்பற்றியும் இப்ப கனபேர் கதைக்கத் தொடங்க, வேற வழியில்லாமல் அந்த வழுக்கலை நிப்பாட்டுறதுக்கு போனகிழமை, காப்பெற் போட்ட பாலத்துண்டுகளை வல்லைப்பாலத்தில இடைக்கிடை பொருத்தியிருக்கினம். அதுக்குப் பிறகு வழுக்கிற தன்மை குறைஞ்சு போட்டுதுதான்.

ஆனால் இதிலையும் விளையாட்டுக் காட்டியிருக்கினம். இப்பிடிப் பொருத்தின காப்பெற் பாலத்துண்டுகள் புதிசா வாங்குப்படேலை. வேற எங்கையோ இருந்த பாலத்தில இருந்துதான் உதுகளைக் கழற்றிக்கொண்டந்து இஞ்ச பூட்டியிருக்கினம். ஏனெண்டால் அந்தக் காப்பெற் துண்டுகள் கரையளில உடைஞ்சுபோய், பழசா இருக்கிற தோட றோட்டுக்கரையில அடிக்கிற வெள்ளைக் கோடும் அழியாமல் கிடக்குது. சங்குப்பிட்டிமாதிரி வேற ஏதும் வேலை நடக்கிற பாலங்களில பழசாப் போட்டுதெண்டு கழற்றி, அதுக்குப் புதிசு வாங்கிப் போட்டிட்டு, அங்க கழற்றினதை வல்லையில கொண்டந்து பூட்டியிருக்கினம் எண்டு அதில போய்வாறவை கதைக்கினம். அப்பிடிப் பார்த்தால் அந்தப் பழைய பாலத்தில போட்ட புதுத் துண்டுகளுக்கும் ஒரு கொமிசன் வந்திருக்கும், பிறகு அங்க பாவிக்க ஏலாது எண்டு கழிச்சதை வல்லையில புதிசுமாதிரி கொண்டந்து பூட்டி அதுக்கும் புதுத்துண்டின்ர காசை எடுத்திருப்பினம் போல. எப்பிடிப் பார்த்தாலும் ரட்டை லாபம் தான். 'சனம் வாய்க்கு வந்ததைக் கதைக்குது அப்பிடியொண்டும் நடக்கேலை' எண்டு றோட்டுகளுக்குப் பொறுப்பான டிப்பார்ட்மெண்ட் சொல்லுமெண்டால், 'அப்ப என்ன சீலம்பாய்க்கு பழைய காப்பெற் துண்டைக்கொண்டந்து பூட்டினியள்? புதிசையே பூட்டியிருக்கலாமே?' எண்டுதான் கேக்கோணும் கண்டியளோ.

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனரக வாகனங்களுக்கு பாடசாலை நேரத்தில் தடை

## பருத்தித்துறை பிரதேசசபையில் பிரேரணை

**யாழ்ப்பாணம், ஜூலை 29**

**வீதி விபத்துகளில் இருந்து பாடசாலை மாணவர்களைப் பாதுகாக்கும் வகையில், பாடசாலை மற்றும் தனியார் கல்வி நிலையங்களுக்கு மாணவர்கள் சென்றுவரும் நேரங்களில் கனரக வாகனங்களின் பயணத்தை தடைசெய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வலியுறுத்தி பருத்தித்துறை பிரதேசசபையில் பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளது.**

பருத்தித்துறை பிரதேசசபை கம்பர்மலை வட்டார உறுப்பினரான தியாகராசா தயாபரன் குறித்த பிரேரணையை மூன்றாவது அமர்வில் சமர்பிப்பதற்கு அனுமதி கோரியுள்ளார். பாடசாலைகள் ஆரம்பிக்கும் போதும் முடிவடையும் போதும் தனியார் கல்வி நிறுவனங்களுக்கும் மாணவர்கள் சென்றுவரும்போதும் வீதியால் குறிப்பிட்ட நேரத்தில் அதிகமான மாணவர்கள் பயணிக்கின்றனர். சமநேரத்தில் கனகரக வாகனங்களும் பயணிக்கின்றன. இதனால் விபத்துகள் ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகமுள்ளன. எனவே பொலிஸாருக்கு அறிவித்து குறித்த நேரத்தில் கனரக வாகனங்கள் பயணிப்பதைத் தடைசெய்வதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று அந்தப் பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-100)

# விஷமிகள் செயலால் கருகிய தென்னைகள்

பளை, ஜூலை 29

பளை, முகமாலையில் பெருமளவு தென்னை மரங்கள் தீயில் எரிந்து நாசமாகியுள்ளன. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. பனைவேலிக்கு விஷமிகளால் வைக்கப்பட்ட தீ, அருகில் உள்ள பனை மரங்களிலும் பரவித் தீப்பற்றி அயலில் உள்ள காணிகளில் காணப்பட்ட தென்னங்கன்றுகளிலும் பரவியுள்ளது. ஊர்மக்கள் தீயை அணைக்கமுயன்றும் முடியாதநிலையில் கிளிநொச்சியிலிருந்து தீயணைப்புப் பிரிவினர் வரவழைக்கப்பட்டு தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. (எ-25,9)



# கறுப்பு ஜூலை படுகொலைக்கு நீதிகோரி தீப்பந்தப் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 29

கறுப்பு ஜூலை இனப்படுகொலையின்போது படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு நீதிகோரி, தீப்பந்தமேந்திய போராட்டம் வடமராட்சி நெல்லியடி பஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் இரவு 7 மணியளவில் நடைபெற்றது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில் அதிகளவானோர் பங்கேற்று தீப்பந்தமேந்தி கோஷங்களை எழுப்பிப் போராட்டத்தில் ஈடுபட்டனர். கலவரங்களில் கொல்லப்பட்ட எமது மக்களுக்கு நீதி வேண்டும், செம்மணிப் புதைகுழிக்கு சர்வதேச நிபுணர்குழு மேற்பார்வை வேண்டும் எனப் போராட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. (ச-100)



## மலையக மக்கள் கூட்டிணைவு ; செம்மணியில் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 29

செம்மணி மனிதப் படுகொலையைக் கண்டித்து மாண்புமிகு மலையக மக்கள் கூட்டிணைவு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை போராட்டம் ஒன்றை முன்னெடுத்தது. யாழ்ப்பாணம் வரவேற்கிறது வளைவுக்கு அருகில் குறித்த போராட்டம் இடம்பெற்றது. போராட்டத்தில் செம்மணி படுகொலைக்கு நீதிகோரி கோஷங்கள் எழுப்பப்பட்டன. (ச-20)



# நம்பிக்கைத் தலைவர் மோடி முதலிடம்

கொழும்பு, ஜூலை 29

உலகத் தலைவர்களில் நம்பிக்கையான தலைவர்களின் பட்டியலில் இந்தியப் பிரதமர் மோடி முதலிடம் பிடித்துள்ளார் என அண்மையில் அமெரிக்காவைச் சேர்ந்த புலனாய்வு நிறுவனமான 'மார்னிங் கன்சல்ட்' நடத்திய ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆய்வின்போது, உலகத் தலைவர்களுக்கு அவர்களது சொந்தநாட்டில் எவ்வளவு மதிப்பு இருக்கிறது என்றும் பொது மக்களிடம் கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது. அத்தோடு உலக நாடுகளில் எந்த அளவுக்கு மரியாதை இருக்கிறது என்றும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆய்வு மற்றும் மதிப்பீட்டு முடிவுகள் தற்போது வெளியிடப்பட்டுள்ளன. இதில் முதல் 8 இடங்களைப் பிடித்து இருக்கும் தலைவர்களின் பெயர்கள் வெளியிடப்பட்டுள்ளன. அவர்களுக்குக் கிடைத்த மதிப்பெண்கள் விவரமும் வெளியிடப்பட்டுள்ளது. உலகின் நம்பிக்கையான தலைவர்களில் பிரதமர் மோடிக்கு முதல் இடம் கிடைத்துள்ளது. அவர் 100 மதிப்பெண்களுக்கு 75 மதிப்பெண்களைப் பெற்று அசைக்கமுடியாதுள்ளார். 2ஆவது இடத்தில் தென்கொரிய அதிபர் லிஜோ மியுங்க், 3ஆவது இடத்தில் அர்ஜென்டினா நாட்டின் அதிபர் ஜாவிஸ்,4ஆவது இடத்தில் கனடாப் பிரதமர் மார்க் கார்னி, 5ஆவது இடத்தில் அவுஸ்திரேலியாப் பிரதமர் அந்தோணி அல்பனீஸ், 6ஆவது இடத்தில் மெக்ஸிகோ அதிபர் கிளெடியா ஷெய்ன்பாம், 7ஆவது இடத்தில் சுவிட்சர்லாந்து அதிபர் கரின் கெல்லர் சுட்டர் ஆகியோர் உள்ளனர். இந்த நம்பிக்கைப் பட்டியலில் 8ஆவது இடத்துக்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் (44 மதிப்பெண்கள்) தள்ளப்பட்டுள்ளார். (ச-இ)

அறிவிப்பு

எலாயன்ஸ் பினான்ஸ் பி எல் சி நிறுவனம் அதன் பங்குதாரர்களுக்கு சிறந்த சேவையை வழங்க அதன் மைய வங்கி அமைப்பு மற்றும் பிற ஒருங்கிணைப்புகளை மேம்படுத்தல்.

**இந்த அமைப்பு மாற்றம்**
**2025 ஆகஸ்ட் 1 முதல் 6 வரை நடைபெறும்.**

இந்த நேரத்தில், எங்கள் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் தேவையின் அடிப்படையில் வரையறுக்கப்பட்ட சேவைகள் வழங்கப்படும். மேலும் விவரங்களுக்கு உங்கள் தொடர்பு அதிகாரி, அல்லது கிளை, அல்லது எங்கள் ஹாட்லைன் 1321 ஐ அழைக்கவும்.

1956 இல் இருந்து

**எலாயன்ஸ் பினான்ஸ்**
கம்பனி பி.எல்.சி
சௌபாக்கியத்திற்கோர் நம்பிக்கையான அடித்தளம்

"எலாயன்ஸ் இல்லம்",வோட் பிரதேசம் ,கொழும்பு 07
www.alliancefinance.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

அன்பும் மரியாதையும் இருப்பவன்
உலகத்தில் எதையும் சாதித்துவிடுவான்.
தீமை செய்பவனும் அவனிடம் பணிவான்.


– கிருபானந்தவாரியார்

# தங்கமுட்டையிடும் வாத்தை அறுக்காது அரசு

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கல்விச் சீர்திருத்தம் பற்றிய வாதப்பிரதிவாதங்கள் நாலாபுறமும் எழத் தொடங்கியுள்ளன. இந்தக் கல்விச் சீர்திருத்தத்தில் உள்ளடக்கப்படவுள்ள விடயங்கள், எதிர்பார்க்கப்படும் நோக்கம் என்பன பற்றி அரசாங்கம் மேலோட்டமான சில தகவல்களை வெளியிட்டுள்ளது. 'மாணவர்களுக்கு சுமையான,அவர்களின் சிறுபராயக் கனவுகளை இல்லாதாக்குகின்ற, இயந்திரத்தனமான கல்வித்திட்டம் இனியும் வேண்டாம். மாணவர்களின் ஆற்றல்களுக்கு களம் அமைக்கும்வகையில் புதிய கல்வித்திட்டம் அமையும்' என்ற சாரப்பட ஜனாதிபதி அநுரகுமார, நாடாளுமன்றில் ஆற்றிய உரையைக் கேட்க இன்பத்தேன் வந்து காதினில் பாய்கின்றதுதான். ஆனால் புதிய கல்விச் சீர்த்திருத்தத்தில் உள்ளடக்கப்படவுள்ள விடயங்கள் தொடர்பில் வெளிவரும் தகவல்கள் அவ்வளவு ஆரோக்கியமானவையாக இல்லை. ஜனாதிபதி கூறியதற்கு மாறாக, புதிய கல்விச் சீர்திருத்தம் இன்னமும் மாணவர்களை இயந்திரத்தனமானவர்களாக மாற்றவும், அவர்களின் இளமைக் கனவுகளைக் கொல்லவுமே பயன்படப்போவதாக கல்வியியலாளர்கள் எதிர்வுகூறுகின்றனர்.

குறிப்பாக பாடசாலை நேரத்தை பிற்பகல் இரண்டு மணி வரை அதிகரிக்கவுள்ளதாகக் கூறப்படுகின்றது. இது மாணவர்களின் கற்றல் ஆர்வத்தைக் குறைக்கவே செய்யும். மதியம் வந்துவிட்டாலே மாணவப்பராயத்தில் இருப்பவர்களுக்கு ஒருபக்கம் பசியும், இன்னொரு பக்கம் கற்றதனால் உண்டான அயர்ச்சியும் அதிகரிக்கத் தொடங்கிவிடும். இந்தநிலையில் அதற்குப் பின்னர் நடத்தப்படும் கற்பித்தலை இவர்களால் கருத்தூன்றிக் கவனிக்கமுடியாமல் போய்விடும். புறக்குடத்து நீர்போல அதற்குப் பின்னர் நடத்தப்படுகின்ற போதனைகள் எல்லாமே பயனற்றுப் போக, இப்போதிருப்பதைவிட கல்வித்தரமும், மாணவர்களின் கற்றல் உளவுரணும் சிதைவடையும் அபாயம் ஏற்படலாம். மாணவர்களின் கற்றல் ஆற்றலையும், எதிர்காலத்தையும் மேம்படுத்துவதற்காகக் கொண்டுவரப்பட்ட கல்விச்சீர்திருத்தமே, அந்தக் கல்விக்கு ஆப்பாக மாறிவிடவும் வாய்ப்புண்டு.

உண்மையில் இப்போதிருக்கும் கல்வித்திட்டத்தால் மாணவர்களின்சிறுபராயக்காலம் தொலைந்துபோகின்றது என்று ஜனாதிபதி அநுர இதயத்திலிருந்து சொல்லியிருப்பாரானால், அவர் முதலில் செய்யவேண்டியது தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையை இல்லாதொழிப்பது தான். ஏனெனில் அதுதான் மாணவர்களின் கனவுகளையும், அவர்களின் ஓய்வுநேரத்தையும் தின்கின்ற அழிக்கமுடியாத வைரஸ் கிருமி. ஒருபுறம் அது மாணவர்களைப் பந்தயக் குதிரைகளாக்கி, பரீட்சைக் களத்திலே போட்டி போட்டு ஓடவைத்து மாணவர்கள் கனவு காணக்கூட நேரமில்லாதவர்களாக, பாடசாலைக்கும் தனியார் கல்வி நிலையங்களுக்கும் மாறி மாறி ஓடும் பரபரப்புக்காரர்களாக மாற்றுகின்றது. இன்னொரு புறத்தில் இந்தப் பரீட்சையை ஒரு வியாபாரப் பண்டமாக்கி கோடீஸ்வரர்களையும் உருவாக்குகின்றது. அண்மையில் புலமைப்பரிசில் பரீட்சைக்குக் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவர், பரிசளிப்பு விழாவுக்கு ஹெலிகொப்டரில் வந்திறங்குமளவுக்கு அவரை பணமழையில் நனைவிக்கின்றது. புலமைப்பரிசில் பரீட்சையை மையமாக வைத்து மாபியாக்கள் உருவாகி விட்டனர். இந்தப் பரீட்சை அந்த மாபியாக்களுக்குத் தங்கமுட்டையிடும் வாத்து என்பதாலேயே அரசாங்கங்கள் புலமைப்பரிசில் பரீட்சையை ஒழித்துவிடாதிருக்க காய்களை நகர்த்துகின்றன. புதிய கல்விச்சீர்திருத்தத்திலும் புலமைப்பரிசில் பரீட்சை முறை இடம்பிடிக்கவே வாய்ப்புகள் அதிகமுண்டு. அப்படி புலமைப்பரிசில் பரீட்சைமுறை தொடர்ந்தால், மீண்டும் மாணவர்களின் சிறுபராயக் காலம் பாடசாலை, தனியார் கல்விநிலையங்கள் என்ற வட்டத்துக்குள்ளே சிதைந்துவிடும். மோதகமாக இருக்கும் இப்போதைய கல்விமுறையை அப்படியே மோதகமாக மாற்றுவது போலவே கல்விச்சீர்திருத்தமும் அமைந்துவிடும். எனவே இந்தப் பரீட்சைமுறை தொடருமா? இல்லையா? என்பது குறித்தும் அரசாங்கம் தெளிவுபடுத்தவேண்டும். அரசாங்கம் கள்ளமௌனம் காப்பதில் இருந்தே புலமைப்பரிசிலுக்கு அவ்வளவு லேசில் அழிவில்லை என்பதை அனுமானிக்கமுடிகின்றது.



# போதையைத் தடுக்க பாடசாலைகளில் குழுக்கள்



கொழும்பு, ஜூலை 29
மாணவர்களிடையே போதைப்பொருள் பயன்பாட்டைத் தடுப்பதற்கு பாடசாலை மட்டத்தில் குழுக்களை நிறுவுவதற்கு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுசபையுடன் இணைந்து இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. ஆயிரத்து 80 பாடசாலைகளில் ஏற்கனவே இந்தக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன என்று பொதுமக்கள் பாதுகாப்புப் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்துள்ளார்.
ஒவ்வொரு குழுவிலும் பெற்றோர், மாணவர்கள் மற்றும் அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுசபையின் பிரதிநிதி ஆகியோர் அடங்குவர். 25 மாவட்டங்களில் உள்ள பாடசாலைகளிலும் போதைப்பொருள் பரவலைத் தடுப்பதே இந்த முயற்சியின் நோக்கம் என்று பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்துள்ளார். (எ-இ)

## மேர்வினுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூலை 29
போலி ஆவணங்களைப் பயன்படுத்தி காணி கொள்வனவில் மோசடி செய்த குற்றச்சாட்டில் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, பிரதிவாதி சார்பில் நீதிமன்றில் முன்னிலையான சட்டத்தரணி, இந்த வழக்கை முழுமையாக விசாரணைக்குட்படுத்தவேண்டும் என்று கோரிக்கைவிடுத்தார். அதையடுத்து எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 24 ஆம் திகதி வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (எ-இ)

## வாய்ப்புற்றுநோய் இலங்கையில் தீவிரம்

கொழும்பு, ஜூலை 29
இலங்கையில் வாய்ப்புற்றுநோய் வேகமாகப் பரவிவருகின்றது என்று மருத்துவ நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.
வாய்ப்புற்றுநோய் காரணமாக அதிகளவிலான நோயாளிகள் இறக்கும் நாடுகளின் பட்டியலில் இலங்கை ஐந்தாம் இடத்தில் உள்ளது. இலங்கையில் நாளாந்தம் குறைந்தபட்சம் 3 பேர் வீதம் வாய்ப்புற்றுநோய் காரணமாக உயிரிழக்கின்றனர்.
வருடந்தோறும் சுமார் 3 ஆயிரத்து 100 பேர் உயிரிழக்கின்றனர் என்று தேசிய புற்றுநோய்த் தடுப்புமையம் வெளியிட்டுள்ள புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. (ச-இ)



## உருளைக்கிழங்கு, வெங்காயத்துக்கு சிக்கல்

கொழும்பு, ஜூலை 29
உருளைக்கிழங்கு மற்றும் வெங்காயச் செய்கைகளில் இருந்து விவசாயிகள் விலகுகின்றனர் என்றும், அதனால் எதிர்காலத்தில் கடுமையான நெருக்கடி நிலை ஏற்படக் கூடும் எனக் கெப்பட்டிபொலப் பொருளாதார மத்தியநிலையத்தின் வணிகர்கள் தெரிவித்துள்ளனர். இதனால் உருளைக்கிழங்கு மற்றும் வெங்காயம் என்பன வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் நிலை உருவாகும் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (எ-இ)

## பல்வேறு குற்றங்கள் சிக்கினார் முதியவர்

கொழும்பு, ஜூலை 29
கொச்சிக்கடை, தலுவக்கொட்டுவப் பகுதியில் வைத்து 60 வயதுடைய சந்தேகநபர் ஒருவரை விசேட அதிரடிப்படையினர் கைதுசெய்துள்ளனர். அவரின் உடைமையிலிருந்து போலி உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடவுச்சீட்டுகள், போலிச் சாரதி அனுமதிப்பத்திரங்கள் மற்றும் தேசிய அடையாள அட்டைகள், போலி வெளிநாட்டு வீசாகள், போலி ஆவணங்களைத் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் உபகரணங்கள், 1.5 கிலோகிராம் எடை தங்கநகைகள், 26.5 மில்லியன் ரூபா பணம் என்பன அவரிடமிருந்து மீட்கப்பட்டுள்ளன. சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ச-இ)



நாளை
புதன்கிழமை - ஆடி 14
30.07.2025
சுபநேரம் : 04.33 - 06.03
ராகுகாலம் : 12.03 - 01.33

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிழாவுக்கு பெறப்படும் மணலை பாதுகாத்து பயன்படுத்தக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 29

நல்லூர்ப் பெருந்திருவிழாவுக்காக இம்முறை எடுத்து வரும் மணலையே பேணிப் பாதுகாத்து தொடர்ச்சியாகப் பயன்படுத்தவேண்டும் என்று யாழ்ப்பாணம் மாநகர சபையிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

நல்லூர்ப் பெருந்திருவிழாவுக்கு மணலை எடுத்து வருவது தொடர்பில் சர்ச்சைகள் ஏற்பட்டிருந்த நிலையில், யாழ். மாவட்டச் செயலர் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

நல்லூர்த் திருவிழாவுக்கான மணல் கோரிக்கை யாழ். மாநகரசபையால் எம்மிடம் முன்வைக்கப்பட்டது.

மருதங்கேணிப் பிரதேச செயலர் அங்குள்ள சமூக மட்ட அமைப்புகளுடன் கலந்துரையாடியபோது அதற்கு அவர்கள் மறுப்புத் தெரிவித்தனர். இந்த நிலையில் தனிநபர் ஒருவர் அரச காணியில் இருந்து மணலைப் பெற்று விநியோகிப்பதற்கான கோரிக்கையை முன்வைத்திருந்தார். அந்தக் கோரிக்கை யாழ்ப்பாணத்தில் உள்ள கனிவளத் திணைக்களத்திடம் எம்மால் அனுப்பப்பட்டது. அந்தக் கோரிக்கை கொழும்புக்கு அனுப்பப்பட்டது. கடற்றொழில் அமைச்சர் இ. சந்திரசேகர் இது தொர்பில் சுற்றாடல் துறை அமைச்சருடன் உரையாடி அதற்கான ஒழுங்குகளை ஏற்படுத்தித் தந்தார். அதன் அடிப்படையிலேயே மணல் விநியோகத்துக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இம்முறை வழங்கப்பட்ட மணலை எதிர்வரும் வரும் திருவிழாக்களுக்கும் பயன்படுத்தக்கூடிய வகையில் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று யாழ். மாநகர சபையிடம் கோரிக்கை முன்வைத்துள்ளோம் என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலர் தெரிவித்துள்ளார். (ச-27)

# அநுரவையும் மக்கள் விரட்டுவார்கள்

அர்ச்சுனா எம்.பி.

கொழும்பு, ஜூலை 29

தற்போதுள்ள அரசாங்கம் மீது மக்கள் அதிருப்தியடைந்துள்ளதால் கோத்தாபய ராஜபக்சவை விரட்டியடித்தது போன்று அநுரகுமார திஸாநாயக்கவையும் இரு ஆண்டுகளில் மக்கள் விரட்டியடிப்பார்கள் என்று நாடாளுமன்ற உறுப்பினர் இ. அர்ச்சுனா தெரிவித்துள்ளார்.

அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியாக வந்து இந்த நாட்டுக்கு எதையும் செய்யவில்லை. சிங்கள மக்கள் இவர் மீது வெறுப்படைந்து போயுள்ளனர். இன்னும் இரண்டு வருடங்கள் கடந்ததும் கோத்தாவை விரட்டியதுபோல் சிங்கள மக்கள் அநுரவையும் விரட்டுவார்கள்- என்றார். (எ-75)

## தெப்பத்திருவிழா

மயிலிட்டி திருப்பூர் அருள்மிகு பேச்சியம்பாள் ஆலயத்தின் நான்காவது வருடாந்த மகோற்சவத்தின் இளைஞர் திருவிழாவான தெப்பத்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை சிறப்பு நிகழ்வுகளுடன் இடம்பெறவுள்ளது.

இன்று செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு பேச்சி அம்பாளுக்கு விசேட வழிபாடுகள் நடைபெற்று, வசந்தமண்டபப் பூசையினைத் தொடர்ந்து மேடை நிகழ்வுகள் மாலை 6.30 மணியளவில் ஆரம்பமாகும். (ம-100)


## வேலையாட்கள் தேவை

நெல்லியடியில் அமைந்துள்ள உணவு உற்பத்தி நிலையம் ஒன்றிற்கு ஆண் ஊழியர்கள் தேவை.

எதிர்பார்க்கப்படும் ஊழியர்கள்

- காசாளர்
- மேற்பார்வையாளர்
- உணவு உற்பத்தியாளர்கள்

வயது எல்லை: 20 - 35

தொடர்பு: 077 144 5701

(CS 30456) E


## ஆதன பெயர்மாற்ற திருத்த அறிவித்தல்

மேற்படி 26.07.2025ம் திகதி உதயன் பத்திரிகையில் பக்கம் 7 இல் காரைநகர் பிரதேச சபை தவிசாளரால் பிரசுரிக்கப்பட்ட ஆதன பெயர்மாற்ற அறிவித்தல் தொடர்பான விளம்பரத்தின் பந்தி 2 இன் 13ம் வரியில் குறிப்பிடப்பட்ட பெயர் மரியதாஸ் நெவின்ஸ் பெண் மேரிறஜனி என்பதை நவரத்தினம் துவாரகன் என்றவாறு திருத்தி வாசிக்குமாறு அறியத்தருகின்றேன்.

தவிசாளர்
பிரதேச சபை, காரைநகர்

(CS 58060) E

## மரண அறிவித்தல்



தோற்றம் 15 . 11 . 1972

மறைவு 28 . 07 . 2025

### சிவஞானம் கோணேஸ்வரன் (கோணா)

வண்ணார்பண்ணை, பத்திரகாளி கோவிலடியை பிறப்பிடமாகவும், லோட்டஸ் வீதி, ஆறுகால்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சிவஞானம் கோணேஸ்வரன் (கோணா) அவர்கள் கடந்த (28.07.2025)திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவஞானம் - மங்களாதேவி தம்பதியரின் அன்பு மகனும், குழந்தைவடிவேல் - தங்கநேசம் தம்பதியரின் அன்பு மருமகனும், ரஜனியின் அன்புக் கணவரும், கஜேந்திகா, லெஜிந்தன், பரிஜன் ஆகியோரின் அன்பு தந்தையும், புஸ்பலதா, ஜெயராணி, விஜயராஜன், நகுலேஸ்வரன், பரமேஸ்வரன், பிரஜனா, சிவானுஜா, துளசிகா ஆகியோரின் அன்பு சகோதரனும், மகேஸ்வரன், சிவகுமார், ரமேஸ், குலபிரதீபன், சிவசீலன், ரமேஸ், ரவீந்திரன், விஜயராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.07.2025) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 02:00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணிற்கு 22 . 06 . 1989

விண்ணிற்கு 29 . 07 . 2021

அமரர்
### பாலசுப்பிரமணியம் செந்தூரன்
(இசை ஆசிரியர்)

நம்ப முடியவில்லை நீ எங்களை எல்லாம்
தவிக்கவிட்டு சென்று நான்காண்டு ஆனதய்யா
அன்னையும் உன்னை அரவணைக்க வந்துவிட்டா.
உங்கள் நினைவுகளை தினம் தினம் சுமக்கின்றோம்
விண்ணுலகில் மகிழ்ந்திருக்க கடவுளை வேண்டுகின்றோம்.
கலியுகம் உள்ளவரை நினைவலைகள் தொடரும்.

கச்சாய் தெற்கு, கொடிகாமம்.

குடும்பத்தினர்.

(CR 45650) A

## மரண அறிவித்தல்

### நல்லையா ஜெயவீரசிங்கம் (தங்கன்)



நெல்லியடி நவிண்டிலைப் பிறப்பிடமாகவும், இந்தியா, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லையா ஜெயவீரசிங்கம் (தங்கன்) அவர்கள் நேற்று முன்தினம்-(27.07.2025) ஞாயிற்றுக்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சாவகச்சேரியில் (இலங்கை) இடம்பெறும் ஏனைய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தோற்றம் 24.10.1955 மறைவு 27.07.2025

தகவல் :
கனேஸ் (பேபி)
சாவகச்சேரி 077 071 9437

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓராண்டு நினைவு தின (சிரார்த்த தின) அழைப்பு

தோற்றம்
12 . 03 . 1962



மறைவு
09 . 08 . 2024

கடந்த வருடம் 09.08.2024 அன்று வெள்ளிக்கிழமை கருட பஞ்சமி திதியில் இறைபதம் அடைந்த எமது குடும்பத்தலைவி

### அமரர் சாந்தினி திருவாதவூரன்

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு தினம் (சிரார்த்த தினம்) இன்று 29.07.2025 செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற உள்ளமையால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

"விக்கினேஸ்வரி பவனம்"
இல: 210 கே.கே.எஸ் வீதி
சுன்னாகம் வடக்கு, சுன்னாகம்

மார்க்கண்டு திருவாதவூரன்
குடும்பத்தினர்
தொடர்பு: 076 681 7464

(CS 56974) E

## மரண அறிவித்தல்

தோற்றம்
27 . 07 . 1937



இறப்பு
26 . 07 . 2025

### சின்னப்பொடியன் நல்லதம்பி
(ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)

வேலணையைப் பிறப்பிடமாகவும், கொழும்புத்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பொடியன் நல்லதம்பி அவர்கள் கடந்த (26.07.2025) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பொடியன்-மாரிமுத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பரமேஸ்வரி (ஓய்வு பெற்ற உபஅதிபர்) அவர்களின் அன்புக் கணவரும், கணபதி, சரவணமுத்து, வைரமுத்து, சின்னாச்சி, முத்து, வள்ளியம்மை, இளையதம்பி, கந்தையா ஆகியோரின் அன்புச் சகோதரனும், சின்னம்மா, இலட்சுமி, சிவக்கொழுந்து, சின்னத்துரை, கந்தையா, நடராசா, சிவக்கொழுந்து, தில்லைநாதர், இராஜேஸ்வரி, சாந்தலிங்கம், யோகேஸ்வரி, காலஞ்சென்ற கணேசதாசன் ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற குகானந்தி மற்றும் ஆனந்தகுமார், அருட்செல்வி ஆகியோரின் அன்புத் தந்தையும், சூரியஜீவன், கலாசக்தி, சாம்சன் ஆகியோரின் மாமனாரும், ஆனந்தி, நிலா, சமந்தா, செல்சி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.07.2025) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வேலணை தெற்கு தாளையன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

இல. 11, 3ம் குறுக்குத்தெரு,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
பிள்ளைகள்.



வேலணை வங்களாவடி முருகன் ஆலயத்தின் தேர்த்திருவிழா நூற்றுக்கணக்கான பக்தர்களின் அரோகரா கோஷத்துடன் கடந்த வெள்ளிக்கிழமை பக்தி பூர்வமாக இடம்பெற்றது. (ச-41-17)

# தெய்வீக இசையரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 29


நல்லூர்க் கந்தசுவாமி ஆலய மஹோற்சவப் பெருந் திருவிழாக் காலத்தில் இலங்கை இளங்கலைஞர் மன்றமும், நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபமும் இணைந்து வழங்கும் தெய்வீக இசையரங்கு இம்முறையும் இடம்பெறவுள்ளது. நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இன்று தொடக்கம் ஓகஸ்ட் மாதம் 24ஆம் திகதிவரை இந்த இசையரங்கு இடம்பெறவுள்ளது, தினமும் மாலை 6.45 மணி தொடக்கம் இரவு 8.30 மணி வரை இந்த இசையரங்கு இடம்பெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-66)

# நல்லூர் ஆலய வீதியில் பந்தல்

யாழ்ப்பாணம், ஜூலை 29

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தனின் பெருந்திருவிழாவையொட்டி ஆலய வீதியில் இம்முறை புதிதாக பந்தல் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. நல்லை ஆதீனத்துக்கு முன்பாக இந்தப் பந்தல் அமைக்கப்பட்டு நிறைவுபெற்றுள்ளது. ஆலயத்துக்கு வருகை தரும் பக்தர்களின் வசதி கருதி இந்தப் பந்தல் அமைக்கப்பட்டுள்ளது. (ச-17)

## மரண அறிவித்தல்



### கதிரவேலு - கோபாலு

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட கதிரவேலு - கோபாலு அவர்கள் 27.07.2025 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - வள்ளியம்மை தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பர்- பூரணம் தம்பதியரின் அன்பு மருமகனும், பராசக்தியின் ஆருயிர்க் கணவரும், காலஞ்சென்றவர்களான பாலச்சந்திரன், பசுபதி, நாகமுத்தன், நாகமுத்து, மருதையினார், கனகம்மா, நடேசு ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான தெய்வானை, கோபாலு, பசுபதி, கோமளம் மற்றும் தனுஸ்கோடி, தங்கம்மா, நடராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும், யோகராணி (ஓய்வுநிலை அதிபர், யா/ புங்குடுதீவு மேற்கு, A.M.T.M வித்தியாலயம்), பத்மநாதன் (அதிபர், யா/அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம்), யமுனாராணி (ஆசிரியர், வ/வவுனியா C.C.T.M.S), நிர்மலராசன் (பிரதேச சபை ஊழியர், வேலணை), கேதீஸ்வரன், சற்குணராணி (கனடா), சோமசேகரன் (கனடா), சிவதர்சன் (கணக்காளர், சமுர்த்தித் திணைக்களம் - வவுனியா), அனுதர்சன் (பொது சுகாதார பரிசோதகர் - ஏழாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற விநாயகமூர்த்தி (கிராம சேவகர்) மற்றும் விஜிதா (ஆசிரியர், யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்), சண்முகராஜா (MAG நிறுவனம் - வவுனியா), ஜீவரேகா, குணராணி, பரூஷன் (கனடா), வினோஜிதா (ஆசிரியர், மு/முள்ளியவளை கலைமகள் வித்தியாலயம்), சங்கீதா (பிரதி முகாமையாளர், மக்கள் வங்கி - வவுனியா), தர்ஷிகா (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம் - கோப்பாய்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சிந்துஜா-ஜெயந்தன், நாகலக்ஷனா (கனடா), வினோஜன் (தாதிய உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை), அக்ஷயா, மாரீஷன், யதுசிகன், பானுஜன், விதுஷனன், அஸ்வின், மிதுஷிகா, ஷயனிகா, ஆருஷன், ஆதுஷா, தக்ஷகி, பபிஷன், விதுர்ஷிக்கா, யஸ்விகா, திஸ்மிகா, அஸ்மிகா, ஷஸ்விகன் ஆகியோரின் அன்புப் பேரனும், ஹர்னிஸ், யஸ்வினி ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.07.2025) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இல. 84/7, ஞானவைரவர் கோவில் வீதி,
உரும்பிராய்.

தகவல்: குடும்பத்தினர்
கோ.அனுதர்சன் (மகன்)
077 339 4938

(CS 3713) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்காட்சி அரசியலுக்காக கல்வித்துறை சீர்குலைப்பு!

## பிரதமர் ஹரிணி தெரிவிப்பு



**கொழும்பு, ஜூலை 29**

**கடந்தகால அரசாங்கங்கள் கல்வியைப் பற்றிப் பெரியளவில் பேசினாலும், அவர்களின் அரசியல் கலாசாரத்தால் கல்வித்துறையில் பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டன. கண்காட்சி அரசியலுக்காகத் தங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தி கல்வித்துறையில் பெரும் அழிவை ஏற்படுத்தியுள்ளனர் என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.**

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கல்வி ரீதியாக முன்னேற்றமடைந்த ஒரு நாடாக எமது நாட்டை அபிவிருத்தி செய்ய அனைவரையும் அழைக்கின்றோம். பிள்ளைகளுக்கும், பெற்றோருக்கும், ஆசிரியர்களுக்கும் சுமையாக அமையாத கல்வி முறைமையை உருவாக்குவது எமது அரசியல் இயக்கத்துக்குள் தொடர்ச்சியாகக் கலந்துரையாடப்பட்ட விடயம். அதை எமது தேர்தல் அறிக்கையிலும் விரிவாகக் குறிப்பிட்டுள்ளோம். தற்போதுள்ள கல்வி முறைமைக்குள் பல முக்கியமான பிரச்சினைகள் உள்ளன. பரீட்சைகளை மையமாகக்கொண்ட இந்தக் கல்வி முறையால் சிறார்கள்மீதும், பெற்றோர் மீதும் அழுத்தங்கள் உள்ளன. இவற்றுக்கு விடைகாண நாம் கல்விச் சீர்திருத்தத்தின் ஊடாக முயற்சிக்கின்றோம். கடந்தகால அரசாங்கங்கள் கல்விக்கான ஒதுக்கீட்டை வரவு - செலவுத் திட்டத்தில் குறைத்து, அதன் சுமையைப் பெற்றோர் மீது சுமத்தின. மனித வளங்கள், அடிப்படை வசதிகள், முதலீடுகள் கல்வித்துறைக்கு ஒதுக்கப்படவில்லை. மறுசீரமைப்புக்கான ஒதுக்கீடுகளை மேற்கொள்ளாவிட்டால் கல்விச் சீர்திருத்தங்களில் தீர்க்கமான மாற்றத்தை ஏற்படுத்துவது கடினம். நாம் கருத்துகளை உள்வாங்கி உண்மையான ஒரு சமூக மாற்றத்துக்குத் தேவையான மாற்றங்களை ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றோம் - என்றார். (எ-இ)

நல்லூர்க் கந்தன்

## மஹோற்சவ கால ஆன்மீக அருளுரை

யாழ்ப்பாணம், ஜூலை 29

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய மஹோற்சவப் பெருந் திருவிழாக் காலத்தில் நடாத்தப்படுகின்ற ஆன்மீக அருளுரை வழமை போல் இம்முறையும் சிவகுரு ஆதீனத்தின் ஏற்பாட்டில் சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகளால் நிகழ்த்தப்படவுள்ளது.

கொடியேற்றத் திருவிழாவான இன்று செவ்வாய்க்கிழமை இரவு 8 மணி முதல் இரவு 8.30 மணி வரை நல்லூரில் அமைந்துள்ள சிவகுரு ஆதீன மண்டபத்தில் நடைபெறும் நிகழ்வில் 'பற்றினை அறுக்கப் பாடுவோம்' எனும் தலைப்பில் ஆன்மீக அருளுரை இடம்பெறவுள்ளது. (ம-66)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பிதழும்



### அமரர் மாரிமுத்து மகாலட்சுமி

**(ஓய்வு நிலை உப அதிபர் தாவடி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை, ஆசிரியை சத்தியசாயி பாடசாலை-மானிப்பாய்)**

கடந்த 30.06.2025 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம் அமரர் மாரிமுத்து மகாலட்சுமி அவர்களது இறுதிச்சடங்கில் கலந்து கொண்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி, மலர் வளையம், சமர்ப்பித்தவர்களுக்கும், மற்றும் தொலைபேசி மூலம் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

மேலும் அன்னாரது வீட்டுக்கிருத்திய நிகழ்வு எதிர்வரும் 30.07.2025 புதன்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பத்தவர்களும் வருகைதந்து அன்னாரது ஆத்மாசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம். இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

## INVITATION FOR BIDS
## MANTHAI EAST PRADESHIYA SABHA
## PANDIYANKULAM

1. The Chairman, Divisional Procurement Committee on behalf of the Chairman, Manthai East Pradeshiya Sabha, Pandiyankulam, Naddankandal invites sealed bids from eligible and qualified bidders for the works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB) but limited to the bidders who registered under Northern Province.
3. Qualification requirements are indicated in section 4 of the Procurement Document. Additional details are provided in the Section 5 of the Procurement Document.
4. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the bidding documents at the same place on any working days from during the document issuing period mentioned in table below between 09:00 hrs and 15:00 hrs.

| S/No | Bid ID | Description of Work | Source of Fund | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Required CIDA Grade & Speciality | Non-Refundable Fee (Rs.) | Bid Validity Period upto | Required Bid Security Amount (Rs.) | Required Bid Security Validity Period |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | Document Issuing/Purchasing Period | | | From 29.07.2025 until 11.08.2025 | | | | | |
| | | Pre-Bid Conference | | | At 10.30 A.M on 04.08.2025 | | | | | |
| | | Closing and Opening of Bids | | | At 10.30 A.M on 12.08.2025 | | | | | |
| 1 | PSDG/NP/MU/MEPS/2025/CWS/01 | Establishment of RO Plant at Vinayagapuram | PSDG Fund | 1.69 | 49 | C9 above (Building) | 2,000.00 | 29-Sep-2025 | 25,450.00 | 27-Oct-2025 |
| 2 | ASD/NP/MU/MEPS/2025/01 | Additional Extension Of Pandiyankulam Preschool | Additional Stamp Duty | 0.68 | 49 | C9 above (Building) | 2,000.00 | 29-Sep-2025 | 10,350.00 | 27-Oct-2025 |

A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Chairman, Manthai East Pradeshiya Sabha, Pandiyankulam, Naddankandal (T.P: 021 228 4434, E.mail: manthaieastps@yahoo.com) from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table above upon payment of non-refundable fees as mentioned in the table. The method of payment will be by cash.

5. Bids (Original & Duplicate) S/No from 01 to 04 must be delivered to the Chairman, Manthai East and Bids (Original & Duplicate) S/No from 05 to 07 must be delivered to the Chairman, Divisional Procurement Committee, Manthai East Pradeshiya Sabha, Pandiyankulam on or before 10.30 A.M as stated in table above. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend at Manthai East Pradeshiya Sabha, Pandiyankulam, Naddankandal.
6. Pre-Bid Conference will be held at Conference Hall, Manthai East Pradeshiya Sabha, Pandiyankulam, Naddankandal commencing at 10.30 AM as stated in table above.
7. All Bids must be accompanied by either Bid security as per the information given in the Tables.

Chairman
Divisional Procurement Committee,
Manthai East Pradeshiya Sabha,
Pandiyankulam, Naddankandal.

29.07.2025

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதிப் பாதுகாப்புத் தொடர்பான விழிப்புணர்வுச் செயலமர்வு நாளை


யாழ்ப்பாணம், ஜூலை 29

வீதிப் பாதுகாப்புத் தொடர்பான விழிப்புணர்வுச் செயலமர்வொன்று யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தில் நாளை புதன்கிழமை காலை 9 மணிதொடக்கம் 12.30 மணிவரை இடம்பெறவுள்ளது.

வடமாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் க.மகேஸ்வரன் தலைமையில் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. நிகழ்வில் வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

வடமாகாண பிரதம செயலாளர் திருமதி தனுஜா முருகேசன், வடமாகாண நிதி, திட்டமிடல் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் அ.சோதிநாதன் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

யாழ்ப்பாணம் பிரதேசசெயலர் எஸ்.சுதர்சன், மருத்துவர் சந்திரகுமார் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (ம-26)



நல்லூர்...

கிழமை முற்பகல் 10.30 மணி முதல் போக்குவரத்துக்குத் தடைசெய்யப்பட்டுள்ளது.

இந்த வீதித்தடை அடுத்த மாதம் 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் வைரவர் சாந்தி உற்சவம் வரை தொடரும். வீதி மூடப்பட்டிருக்கும் வேளைகளில் மாற்று வீதிகள் ஊடாகப் பயணிக்குமாறு யாழ். மாநகர சபை பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது.

வீதி தடைசெய்யப்பட்ட பகுதிகளில் நிரந்தரமாக வசிப்பவர்களுக்கும், குறித்த பகுதிகளில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கும் வழமைபோன்று யாழ். மாநகரசபையினரால் வாகன அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ச-66-26)


## கேரள கடற்பரப்பில்

# எரிந்த கப்பலின் துகள்கள் மன்னார் கடற்பரப்பில் மீட்பு

கேரளக் கடற்பரப்பில் மே மாதம் 25ஆம் திகதி மூழ்கிய கப்பலில் இருந்த பிளாஸ்ரிக் துகள்கள் மன்னார் கடற்பரப்பில் கரையொதுங்கி வரும் நிலையில், அவற்றை மீட்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மன்னார் சௌத்பார், கீரி, தாழ்வுபாடு கடற்கரைப் பகுதிகளில் கரையொதுங்கியுள்ள பிளாஸ்ரிக் துகள்களை அப்புறப்படுத்தும் செயற்பாடு நேற்று முதற்கட்டமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பிளாஸ்ரிக் துகள்களை அப்புறப்படுத்தும் நடவடிக்கைக்காக, கொடுப்பனவு அடிப்படையில் மக்கள் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். கடல்சார் பாதுகாப்புத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இந்தப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஆரம்பநிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் ஜெகதீஸ்வரன், மன்னார் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன், மன்னார் பிரதேச செயலர் எம்.பிரதீப், கடல்சார் பாதுகாப்புத் திணைக்களப் பிரதிநிதிகள் உட்படப் பலரும் கலந்துகொண்டனர். (அ-ம-56)



யாழ்ப்பாணத்தில்...

சுக் கப்பல் யாழ்ப்பாணத்துக்கு வருகைதரவுள்ளது. ஓகஸ்ட் மாதம் 15ஆம் திகதி, 22ஆம் திகதி என இரு தடவைகள் அந்தக் கப்பல் யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளது.

இந்தக் கப்பல் 2023ஆம் ஆண்டு 9 தடவைகளும், 2024ஆம் ஆண்டு 6 தடவைகளும் ஏராளமான சுற்றுலாப் பயணிகளுடன் யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-27)

### 3 என்புத்...

காணப்பட்டன. செம்மணி மனிதப் புதைகுழியின் இரண்டாம்கட்ட அகழ்வுப் பணிகளின் 23ஆம் நாள் நடவடிக்கைகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன. இதன்போது மூன்று என்புத்தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டதுடன், ஓர் என்புத்தொகுதி முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டது.

இதன்படி, செம்மணி மனிதப் புதைகுழியில் இருந்து இதுவரை 104 மனித என்புத்தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் 96 என்புத்தொகுதிகள் முழுமையாக மீட்கப்பட்டுள்ளன.

நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜாவின் கண்காணிப்பில், துறைசார் நிபுணரும் பேராசிரியருமான சோமதேவாவின் தலைமையில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்றுவருகின்றன. காணாமல் ஆக்கப்பட்டோர் ஆணைக்குழுவின் சட்டத்தரணி பூரணி மரியநாயகம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பான சட்டத்தரணி ஞா.ரணித்தா, சட்ட மருத்துவ அதிகாரி பிரணவன் செல்லையா தலைமையிலான குழுவினர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட மற்றும் கலைப்பீட தொல்லியற்துறை மாணவர்கள் ஆகியோர் அகழ்வுகளில் முன்னிலையாகிவருகின்றனர்.

சட்டத்தரணிகள் சங்கத்தின் சார்பில் நேற்று ஜனாதிபதிசட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், சட்டத்தரணி கே.சயந்தன் ஆகியோர் அகழ்வுப்பணிகளை அவதானித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

### செம்மணிப்...

சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழுவால் இது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் உள்ளதாவது:- செம்மணி மனிதப்புதைகுழியில் சிறுவர்கள் மற்றும் குழந்தைகளின் என்புத் தொகுதிகள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்ட என்புத்தொகுதிகள் இதுவரை மீட்கப்பட்டுள்ளன. இலங்கை அரசாங்கத்திடம் நீண்டகாலமாக வலியுறுத்திவருகின்ற உண்மை மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதை நோக்கிய பயணத்தில் இந்த மனிதப்புதைகுழி அகழ்வு மிகமுக்கியமான செயன்முறையாகும்.

அதேவேளை இந்த அகழ்வுப்பணிகள் மற்றும் விசாரணைகள் என்பன சர்வதேச மனித உரிமைகள் சட்டங்கள் மற்றும் நியமங்களுக்கு அமைவாக முன்னெடுக்கப்படுவதை இலங்கை அரசாங்கம் உறுதிசெய்வது மிகவும் அவசியமாகும். மனிதப்புதைகுழியில் கண்டறியப்படும் ஒவ்வொரு மனித என்புக்கூட்டின் பின்னணியிலும் நினைத்துப்பார்க்கமுடியாத துன்பத்துக்கு முகங்கொடுத்த ஒரு குடும்பம் இருக்கிறது. எனவே இந்த மனித என்புக்கூடுகள் தொடர்பான தடயவியல் விசாரணைகள் தனிமனித கௌரவத்துக்கான மரியாதையுடனும் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் முழுமையான பங்கேற்புடனும் முன்னெடுக்கப்படவேண்டும்.

அதுமாத்திரமன்றி இந்தக் குற்றங்களின் பாரதூரத்தன்மையைக்கருத்திற்கொண்டு நோக்குகையில், இந்தச் செயன்முறையானது உச்சபட்ச நேர்த்தியுடனும், சட்ட நியமங்களுக்கு அமைவாகவும் முன்னெடுக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு சர்வதேசமேற்பார்வை இன்றியமையாததாகும் - என்றுள்ளது. (அ-ம-இ)

### அதிநவீன...

டுக்குப் பாதுகாப்பு அமைச்சு இதுவரை முழுமையான அனுமதியை வழங்கவில்லை என்று தெரியவருகின்றது.

செம்மணியில் குறிக்கப்பட்ட பகுதிகள் மட்டும் அகழ்வுப் பணிகளை முன்னெடுக்காமல், பரந்துபட்ட அகழ்வுகள் இடம்பெற வேண்டும் என்று உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் வலியுறுத்தல்கள் முன்வைக்கப்பட்டன. இதையடுத்து, வெளிநாட்டில் இருந்து ஜி.பி.ஆர். ஸ்கான் இயந்திரம் கொண்டுவரப்பட்டு அங்கு விரிவான ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இந்த அதிநவீன ஸ்கானரின் சில பாகங்களின்பயன்பாட்டுக்கு பாதுகாப்புஅமைச்சு இதுவரை முறையான அனுமதி வழங்கவில்லை. பாதுகாப்பு அமைச்சின் ஒப்புதலைப் பெறும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ-ம-26)

### நிஷாந்த...

நிஷாந்த உலுகேதென்ன செயற்பட்ட காலத்தில் இடம்பெற்ற ஒரு கடத்தல் சம்பவத்தில் அவருக்கு நேரடித் தொடர்புள்ளதாகக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்தன. அது தொடர்பிலேயே அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-இ)

### ரயில்...

தீர்வுகாணுமாறு ரயில் சாரதிகளின் தொழிற்சங்கம் நீண்டகாலமாகச் சுட்டிக்காட்டி வந்தது. எனினும், இதுவரை காத்திரமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. இதையடுத்தே, இன்று நள்ளிரவு முதல் 48 மணிநேர பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக ரயில் சாரதிகள் சங்கம் அறிவித்துள்ளது. (அ-ம-இ)

### தவறி...

பண்டத்தரிப்பு பகுதியைச் சேர்ந்த அன்னராசா அலக்சன் (வயது-19) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

ஆட்டம், பாட்டம் எனக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டிருந்த வேளையில், அவர் திடீரென தலை பலமாக அடிபடக்கூடிய வகையில் தவறி வீழ்ந்துள்ளார். அவர் மூச்சற்ற நிலையில் இருப்பதை அவதானித்த உறவினர்கள் உடனடியாக தெல்லிப்பழை ஆதார மருத்துவமனைக்குக் கொண்டுசென்றுள்ளனர். எனினும் அவர் முன்னதாகவே உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26-66)

### பாதுகாப்பு...

யில் இருந்து தவறி வீழ்ந்து உயிரிழந்திருக்கலாம் என்று நம்பப்படுகின்றது.

தர்மசீலன் ரகுராஜ் (வயது-34) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார். இந்த விடயம் தொடர்பில் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதும், மேலதிக நடவடிக்கைகளை மேற்கொண்ட பொலிஸார் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தின் கவனத்துக்கு விடயத்தைக் கொண்டுசென்றனர். கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றத்தின் நீதிபதி சம்பவ இடத்துக்குச் சென்று சடலத்தைப் பார்வையிட்டார். இதைத் தொடர்ந்து சடலம் மீட்கப்பட்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்காக கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டது. கட்டத்தின் மேல் தளத்தில் பணியில் ஈடுபட்டிருந்த அவர் தவறி வீழ்ந்து உயிரிழந்திருக்கலாம் என்று கருதப்படுகின்றது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (அ-ம-113)

### நல்லூரானுக்கு...

திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இன்று காலை 8 மணியளவில் காலைச் சந்திப் பூசையைத் தொடர்ந்து காலை 8.15 மணியளவில் வசந்தமண்டபப் பூசைநடைபெறும். அதனைத் தொடர்ந்து இன்று முற்பகல் 10 மணியளவில் கொடியேற்றம் சிறப்பாக நடைபெறவுள்ளது.

இன்று ஆரம்பமாகும் பெருந்திருவிழா தொடர்ந்தும் 25 தினங்கள் காலை, மாலை உற்சவங்களாக இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதலனுக்கு

# மோட்டார்சைக்கிள் வாங்குவதற்கு சொந்த வீட்டில் நகைகள் திருட்டு

## யுவதி உட்பட ஏழு பேர் கைது; யாழ்ப்பாணத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூலை 29

யாழ்ப்பாணத்தை சேர்ந்த 'ரிக் ரொக்' பிரபலங்களில் ஒருவரான தனது காதலனுக்கு மோட்டார் சைக்கிள் வாங்குவதற்காக, வீட்டில் நகைகளைத் திருடிய யுவதி உள்ளிட்ட ஏழு பேரை சாவகச்சேரி பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

யாழ்ப்பாணத்தை சேர்ந்த இளைஞன் ஒருவர் 'ரிக் ரொக்' சமூக வலைத்தளங்களில் தனது காணொளிகளை பதிவேற்றி பிரபலமானவராக தன்னை காண்பித்து வந்துள்ளார்.

குறித்த இளைஞனுடன் 'ரிக் ரொக்' மூலம் அறிமுகமான சாவகச்சேரி பகுதியைச் சேர்ந்த யுவதி, அவரை காதலித்து வந்துள்ளார். இந்த நிலையில் தனது காதலனுக்கு, அதிநவீன மோட்டார்சைக்கிள் ஒன்றைக் கொள்வனவு செய்வதற்காகவும், காதலன் சொகுசு வாழ்க்கை வாழ்வதற்காவும் தனது வீட்டிலிருந்து சுமார் 19 பவுண் நகையை அந்த யுவதி திருடிக் கொடுத்துள்ளார்.

வீட்டில் இருந்த நகைகள் காணாமல் போனமை தொடர்பில், யுவதியின் பெற்றோர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், யுவதி மீது சந்தேகம்கொண்டு அவரிடம் விசாரணைகளை முன்னெடுத்த போது, வீட்டில் இருந்த நகைகளைத் திருடி காதலனுக்கு வழங்கியதை ஒப்புக்கொண்டுள்ளார். யுவதியின் வாக்கு மூலத்தின் அடிப்படையில், காதலனை கைது செய்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர். அதன் அடிப்படையில் வீட்டில் நகைகளை திருடிய யுவதி, அவரது காதலன், யுவதி வீட்டில் நகைகளைத் திருடுவதற்கு உடந்தையாக செயற்பட்ட யுவதியின் நண்பி, நகைகளை விற்க உதவியவர்கள், நகைகளை வாங்கியவர்கள் என ஏழு பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர். அவர்களிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ம-20)


### வேலைக்கு ஆட்கள் தேவை

- யாழ் மாநகரை தளமாக கொண்டு இயங்கி வரும் பிரபல மின்னியல் சாதன விற்பனை காட்சியறை ஒன்றிற்கு சிறந்த விற்பனைப் பிரதிநிதிகளை எதிர்பார்க்கின்றோம்.
- கட்டட நிர்மாண வேலைக்கு ஆட்கள் தேவை.

தொடர்புகளுக்கு:
077 966 9498, 076 760 0403

### காணி விற்பனைக்கு

நாவற்குழியில் 55 பரப்பும், 7 1/2 பரப்பும், அராலியில் 450 பரப்பு, காரைநகர் வீதியில் இருந்த 1Km தூரத்தில் கடற்கரை முன்பாக தொழிற்சாலை அமைக்க கூடிய உகந்த இடம்.

தொடர்புகளுக்கு: 07 665 9735, 076 071 2676 077 662 6117

### வீட்டுப் பணிப்பெண் தேவை

யாழ் நகரில் தங்கி நின்று வேலை செய்வதற்கு வீட்டுப் பணிப்பெண் தேவை.
சம்பளம் 40000/- - 45000/- வரை
தொடர்புகளுக்கு:-
021 221 7673, 076 664 4228

### தவறவிடப்பட்டுள்ளது

கைலாசப்பிள்ளையார் கோவிலிற்கும் கடைச்சாமி Lane இற்கும் இடையில் தேசிய அடையாள அட்டை, வாகன அனுமதிப்பத்திரம், அலுவலகப் புத்தகங்கள், ஒருதொகைப் பணம், வங்கிப்புத்தகங்கள் போன்ற முக்கியமான ஆவணங்கள், மூக்குக்கண்ணாடி ஆகியவை 28.07.2025 திங்கட்கிழமை காலை 09.00 - 09.30 தவறவிடப்பட்டுள்ளது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் கீழ் காணும் தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:
077 666 5900, 077 028 0017

### காணி விற்பனைக்கு உண்டு

ஈவினை பிள்ளையார் கோயிலடி, புன்னாலைக்கட்டுவன் 12 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. இன்னும் 1 1/2 வருடங்களில் காய்க்கக்கூடிய தென்னையும் பல பயன்தரும் மரங்களும் இக்காணியில் உள்ளது.

தொடர்புகளுக்கு:- 070 335 3315

### காணி விற்பனைக்கு

கோப்பாய் இராச வீதிச் சந்திக்கு அருகாமையில் 3 1/2 பரப்பு காணி விற்பனைக்குண்டு. குடிமனை அமைப்பதற்கும் தோட்டம் செய்வதற்கும் பொருத்தமானது. கிணறு, தென்னை மரங்கள் உண்டு.

தொடர்புகளுக்கு: 077 310 1357

### காணி விற்பனைக்கு

55 New செம்மணி வீதி, கல்வியங்காட்டில் 2 1/4 பரப்புக் காணி விற்பனைக்கு.
Point Pedro வீதியில் இருந்து 350m நல்லூர் கோவில் - 1.7 km

தொடர்பு: 077 185 4870

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் திருநெல்வேலி பரமேஸ்வரா சந்திக்கு அருகாமையில், இராமநாதன் வீதியில் 1 பரப்பு, 2 குளி காணி விற்பனைக்குண்டு

- ஒரு பரப்பின் விலை மூன்று கோடியே ஐம்பது லட்சம் (35,000,000)
- நிலப்பரப்பு
- பரமேஸ்வரா சந்தியில் இருந்து 200 m தூரம்
- யாழ் பல்கலைக்கழகத்திற்கு முன்பாக இராமநாதன் வீதியில்
- விலை பேசித்தீர்மானிக்கப்படும்
- தரகர் தேவையில்லை

தொடர்புகளுக்கு:
077 288 0152 077 468 3354


# 'ஒளிரும் சூரியன்' பத்திரிகை வெளியீடு

வவுனியா, ஜூலை 29

பனைசார் வாழ்வியல் மற்றும் நவீன தொழிற்றுறையை முதன்மைப்படுத்தி வடிவமைக்கப்பட்ட "ஒளிரும் சூரியன்" பத்திரிகை வவுனியாவில் அண்மையில் வெளியிடப்பட்டது.

முனைவர் மேழிக்குமரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் அதிதிகளாக சு.சண்முகவடிவேல், ஆயுள்வேத வைத்தியர் சரஸ்வதி பிரபாகரன் ஆகியோர் கலந்துகொண்டனர். பத்திரிகைக்கான அறிமுக உரையை பிரதம ஆசிரியர் ந.பார்த்தீபன் நிகழ்த்தினார். கருத்துரையை சூழலியலாளர் ஆர். இராஜேஸ்வரன் ஆற்றியிருந்தார். (எ-25,110)

# நல்லூர்த் திருவிழாவில் வெளிவீதிப் பஜனை

யாழ்ப்பாணம், ஜூலை 29

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலய மஹோற்சவப் பெருந்திருவிழாக் காலத்தில் மாணவர்களிடையே ஆன்மீக விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாகவும், இறைபக்தியை அதிகரிக்கும் முகமாகவும் நடத்தப்படுகின்ற பஜனை நிகழ்வு வழமைபோன்று இந்த வருடமும் சிவகுரு ஆதீனத்தின் ஏற்பாட்டில் ஆதீனமுதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகளின் வழிகாட்டலில் நடைபெறவுள்ளது.

பஜனை, கொடியேற்றத் திருவிழாவான இன்று செவ்வாய்க்கிழமை முதல் கொடியிறக்கத் திருவிழாவான எதிர்வரும் 22ஆம் திகதி வரை முருகப்பெருமான் மாலை வேளையில் வெளிவீதிவலம் வரும்போது நடைபெறும்.

பஜனை நிகழ்வில் பங்குபற்றி நல்லைக் கந்தப்பெருமானின் திருவருளைப் பெறுமாறு பாடசாலை மாணவர்களையும், அறநெறிப்பாடசாலை மாணவர்களையும், முருகப்பெருமான் அடியவர்களையும் சிவகுரு ஆதீனம் அழைத்துள்ளது.

பஜனையில் பங்குபற்ற விரும்புகின்ற பாடசாலைகளும், (அதிபர் அல்லது பொறுப்பாசிரியர் அல்லது சைவசமய ஆசிரியர் அல்லது சங்கீத ஆசிரியர் அல்லது ஆசிரியர் அல்லது அறநெறி ஆசிரியர்) ஆன்மீக, சமய நிறுவனங்களும், மேலதிக விவரங்களைப் பெற விரும்புகின்ற ஆர்வலர்களும் 0772220103 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளமுடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-66)

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜூலை 29

சைவ வாழ்வியலில் திருவிளையாடற்புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்பு ணர்வை ஏற்படுத்தும்வகையில் அராலி கிழக்கு மலையாளங்காடு ஐயனார் கோவிலில் நடத்தப்படும் வாராந்தத் திருவிளையாடற் புராணச் சிறப்புச் சொற்பொழிவுத்தொடர் எதிர்வரும் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் ஒழுங்கமைப்பில் நடைபெறும் நிகழ்வில், பரஞ்சோதிமுனிவர் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலைநிகழ்வும், இளஞ்சைவப்புலவர் பிரசங்கச்சுடர் க. கயிலைவாசனின் "நான்மாடக் கூடலாண படலம்" எனும் விடயப்பொருளில் சொற்பொழிவும், இடம்பெறவுள்ளன. சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பாராட்டுப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-41)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி இல. 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.07.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.